DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX Realty Inc. Brokerage
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
ignite
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road
Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
PROPERTY MAX
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1500
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday January 3, 2025

# இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 'இறுதிக் கிரியை' நடத்திய 'சுமந்திரன் அணி'




*“முக்கிய பதவிகளுக்கு ““தலையாட்டி““களை நியமித்தும் பேச்சாளர் பதவியை மீண்டும் கைப்பற்றியும் கட்சியின் விசுவாசிகளை வெளியேற்றியும் இடைக்காலத் தடைகளை விதித்தும் சர்வாதிகாரத்தனமாக தமிழரசுக்கட்சியை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து சேடமிழுத்துக் கிடக்கும் தமிழரசுக் கட்சியின் இறுதிக் கிரியைக்கான ஏற்பாடுகளை “சுமந்திரன் அணி“ தடபுடலாக செய்து முடித்துள்ளது““*

*- கே.பாலா*

தமிழ் தேசிய இனத்தின் தாய் கட்சி எனக்கூறப்படும் இலங்கை தமிழரசுக்கட்சி இலங்கை அரசியலில் தனது 75 ஆவது ஆண்டு பவளவிழாவை ஒருபுறம் கொண்டாடும் நிலையில் மறுபுறம் அதன் ஆயுளுக்கு முடிவுகட்டும் தீவிரமுயற்சியில் ஈடுபட்டுள்ள சுமந்திரன் அணி அந்த முயற்சியில் வெற்றியும் பெற்று வருவதனை அண்மையில் நடந்து முடிந்த தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் அவதானிக்க முடிந்தது.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

# இவ்வருடத்தின் 'வர்த்தக தீபம்' விழாவில் பலதுறைகள் சார்ந்த சாதனையாளர்களைக் கௌரவித்த கனடா–இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம்

கனடாவில் கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவரும், இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் தமது இவ்வருடத்து “வர்த்தக தீபம்“ பெருவிழாவில் பல்வேறு துறைகள் சார்ந்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்ததுடன் கனடா ஸ்காபுறோ நகரில் நிறுவப்படவுள்ள “ஸ்காபுறோ தமிழர் சமூக மையத்திற்கு 10 ஆயிரம் டாலர்களை வழங்கியதன் மூலம் தாங்கள் சமூகத்தின் மீதும் அக்கறை கொண்டவர்களே என்பதையும் பறை சாற்றியுள்ளனர்.

இவ்வாறான நற்பணிகளை ஆற்றும் கனடா-இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் இயக்குனர் சபையினருக்கும் பொதுச் சபையினருக்கும் கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

இவ்வருட “வர்த்தக தீபம்“ விழாவில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம், சங்கத்தினரால் “பல்லினங்களுக்கும் ஊடகப் பணியாற்றும் சிறந்த பத்திரிகை ஆசிரியர்“ என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)



கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!
இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம்.
January 21 தொடக்கம் ஒரு வார காலம் நீங்கள் கியுபாவில் தங்கியிருக்கலாம். கட்டணம் $1,300 மட்டுமே!
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊராடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு: Thava - 647-469-9839

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd fl)
Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23 -8907 The Gore Rd,
Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851



MUSIC & DANCES OVER 700 PERFORMERS
TITLE SPONSOR
STATE ELECTRIC INC.
647-534-4432
Analai Express
4 JANUARY 2024
SATURDAY 3.PM
CHINESE CULTURAL CENTRE 5183 SHEPPARD AVE E, SCARBOROUGH, ON M1B 5Z5
647.278.5881 | 416.678.5866
www.analai.ca | analai.parampariyam@gmail.com
GOLD SPONSOR
(416) 626-8421
SILVER SPONSOR
ARI PARAMALINGAM
(905)7811356 | (905)7811356
DR. M. SATHIYABALAN
(ALBION FINCH DENTAL CENTRE)
(416) 747-7700
DYNEVOR EXPRESS
1-866-DYNEVOR (396-3867)
info@dynevorexpress.com
eXp REALTY
MAHESAN SUBRAMANIAM
BUY OR SELL
416-816-0141
BRONZE SPONSOR
HIMALAYA
(647) 283-2283
647-406-2393
Tevola
(416) 814 6035
(416) 840 0670
TAANK CAKE HOUSE INC
Mr. Digital Photo Lab
416-746-0006
Nandos Kitchen
+1 (416) 388-4791
J.R.B
UNWIND psychotherapy
647-328-8544
MEDIA SPONSOR
yugam radio
LUCKY
IBC தமிழ்
LIVE
Easy 24 News

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com




## உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் மாகாண சபைகள் இயங்காவிட்டாலும் அவற்றின் நிர்வாக அதிகாரிகள்களின் பணிகள் தான் எவை?

அநுர குமார அவர்கள் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பெற்று,. அதற்குப் பினனர் அவர் தலைமையிலான ஆட்சி அமைந்து அமைச்சர்கள் நியமனம் செய்யப்பெற்று ஆரோக்கியமானதோர் ஆட்சியானது அழகிய தேசத்தின் இருப்பைத் தக்க வைப்பதற்காக அவதானமாக நகர்ந்து செல்கின்றது.

புதிய அரசாங்கம் நிறுவப்பெற்றதும். வடக்கு மாகாணத்திற்கு கிட்டிய பேரதிஸ்டம் எதுவெனில், மாகாணத்திற்கு நியமிக்கப்பெற்ற புதிய ஆளுனர் வேதநாயகன் அவர்கள். அவர் முன்னர் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக நெருக்கடிகள் நிறைந்திருந்த காலப்பகுதியில் பணியாற்றியவர்.

அவர் தனது நிர்வாகத்தின் கீழ் வரும் அனைத்து மாவட்டங்களுக்கும் தவறாது சென்று அங்குள்ள அதிகாரிகளையும் ஏனைய அரச ஊழியர்களையும் சந்தித்தும் அறிவுரைகளை தனது உத்தியோகபூர்வமான உரைகளின் போது சேர்த்த பயனுள்ள வகையில் தனது பணியை ஆற்றிவருகின்றார். உயர் அதிகாரிகள் தொடக்கம் மீனவர்கள் மற்றும் விவசாயிகள் என அனைத்துத் தரப்பினரையும் சந்தித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டும் அவர்களுக்கு தேவையான அறிவுரைகளைச் சொல்லியும் தனது நிர்வாகப் பணியை செவ்வனே ஆற்றிவருகின்றார் என்பதை நேரடியாகப் பார்க்கின்றனர்.

அண்மையில், புத்தாண்டில் இலங்கை ஜனாதிபதியினால் அறிவிக்கப்பெற்று நடைமுறைக்கு வந்துள்ள **'Clean Sri Lanka'** திட்டம் பற்றிய அறிவுறுத்தல்களை அதிகாரிகளுக்கு வழங்குவதற்காக மாவட்டங்கள் அனைத்திற்கும் விஜயம் செய்து வருகின்றார். யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் போது, பொது மக்கள் திருப்திப்படும் அளவிற்கு அவர்களுக்கான சேவையைச் செய்யுங்கள் என்று வினயமாகக் கேட்டுள்ள ஆளுனர் அவர்கள் பொதுமக்களை "அலைய"விடாதீர்கள் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்வாறாக தமிழர்களின் மாகாணங்களாகக் கணிக்கப்பெற்றுள்ள வடக்குக் கிழக்கில் போரின் வடுக்களைச் சுமந்த வண்ணம் நமது மக்கள் அலைந்து திரிகின்றார்கள். அவர்களது வலிகள் போக்கும் வகையில் எமது அதிகாரிகள் சேவையாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை நாமும் இந்த வருடத்தின் முதல் கதிரோட்டத்தின் மூலமாக அதிகாரிகள் சமூகத்திடம் சமர்ப்பிக்கின்றோம்.!




# மக்களை அலைக்கழிக்காமல் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுங்கள் – மன்னாரில் வடக்கு ஆளுநர் வேதநாயகன் அதிகாரிகளிடம் கோரிக்கை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)



புத்தாண்டு அன்று எடுத்துக் கொண்ட உறுதி மொழிக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் அரச பணியாளர்கள் செயற்பட வேண்டும் எனவும், மக்களை அலைக்கழிக்காமல் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுங்கள் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் 2ம் வியாழக்கிழமை காணிப் பிரச்சினை தொடர்பான நடமாடும் சேவை இடம்பெற்றது. நடமாடும் சேவைக்கு முன்னதான மன்னார் மாவட்டம் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனால் ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

புலவு காணிகளில் அமைக்கப்பட்டுள்ள அரச கட்டிடங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

புலப்படுகையில் அமைக்கப்பட்ட அரச கட்டடங்களுக்கு அனுமதி வழங்க முடியாது எனக் குறிப்பிடப்பட்ட நிலையில், எதிர்காலத்தில் அந்தக் கட்டிடங்களை வேறிடங்களை அமைப்பதற்கான ஒழுங்குகள் தொடர்பில் ஆராயுமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

அதேவேளை மன்னார் மாவட்டத்தில் காணியற்ற மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் பெரும் சவால்களை எதிர்கொள்வதாக மன்னார் மாவட்டச் செயலாளர் குறிப்பிட்டார்.

குறிப்பாக வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன மக்கள், அரச திணைக்களங்கள் பயன்படுத்திய பல காணிகளை தமக்குரியது என வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ள மையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் இந்தப் பிரச்சினை பொதுவாக இருப்பதாகவும் இதில் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் கோரியுள்ள விவரங்களை அனுப்பி வைக்குமாறும் அறிவுறுத்திய ஆளுநர், அது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளரை அழைத்து இந்தப் பிரச்சினைகள் தீர்க்கலாம் என ஆளுநர் குறிப்பிட்டார். மேலும் மன்னார் மாவட்டத்தில் லட்சக்கணக்கான கால்நடைகள் காணப்படும் நிலையில் அவற்றுக்குரிய மேய்ச்சல் தரவைகள் இல்லை எனக் குறிப்பிடப்பட்டது. மேலும், குத்தகை அடிப்படையில் காணி வழங்கல் களில் உள்ள தாமதத்தை தவிர்ப்பதற்கு மேலதிக ஆளணி களை தற்காலிகமாக வழங்கி அதனை முடிக்குமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.


இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் மேற்கொள்ளுமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

அதன் பின்னர் மன்னார் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மக்களால் முன்வைக்கப்பட்ட காணிப் பிரச்சினைகள் தனித்தனியாக ஆராயப்பட்டு தீர்வுகள் காணப்பட்டன.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கடத்தப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட படுகொலை செய்யப்பட்டு மட்டக்களப்பு எருமை தீவில் புதைக்கப்பட்டார்

## முன்னாள் கடற்படை சிப்பாய் தெரிவிப்பு



(நமது நிருபர்)

இராணுவத்தினரால் கடத்தப்பட்ட பிரபல சிங்கள ஊடகவியலாளரான பிரகீத் எக்னெலிகொட படுகொலை செய்யப்பட்டு மட்டக்களப்பு எருமை தீவில் புதைக்கப்ப ட்டுள்ளதாக கண்கண்ட சாட்சியான முன்னாள் கடற்படை வீரர் பரபரப்புத் தகவல்களை சிங்கள மொழி யூடியூப் ஊடகவியலாளரான சுதந்த திலகசிறியின் சுதா கிரியேசன்ஸ் சேனலில் கடந்த 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ளார்.

சிங்கள மொழி யூடியூப் ஊடகவியலாளரான சுதந்த திலகசிறியின் சுதா கிரியேசன்ஸ் SUDA CREATION சேனலில் 29-12-2024 அன்று மாலை நடைபெற்ற கலந்குறித்த நேர்காணல் நிகழ்ச்சியில் தற்போதைக்கு வெளிநாடு ஒன்றில் வதியும், இலங்கைக் கடற்படையின் முன்னாள் சிப்பாயான பிரியசாந்த என தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு கலந்து கொண்ட உரையாடல் ஒன்றின் மூலம் இந்த தகவல்களை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இவர் திருகோணமலையில் முன்னர் கடற்படையின் பொறியியல் பிரிவில் சிப்பாயாக கடமையாற்றிய நிலையில் அவரை தண்டனையில் இடமாற்றம் செய்யப்பட்டு மட்டக்களப்பு நகரிலுள்ள கடற்படை முகாமில் கடமையாறி வந்ததாகவும் அப்போது பிரகீத் எக்னெலிகொடவைக் கடத்திச் சென்ற குழுவில் எதிர்பாராதவிதமாக தானும் இணைக்கப்பட்டிருந்ததாகவும், அவரைக் கடத்திச் சென்ற போது அவர் ஊடகவியலாளர் என்பதோ, பிரகீத் எக்னெலிகொட என்பதோ தனக்குத் தெரிந்திருக்கவில்லை எனவும்.

பின்னர் மட்டக்களப்பு கடற்படை முகாமிற்கு கட்டப்பட்ட நிலையில் கொண்டுவரப்பட்ட அவரை படகில் ஏற்றப்பட்டு எருமைத் தீவுக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் அவரை அமைச்சு செயலாளர் ஒருவரின் உத்தரவின் பேரிலேயே ரில்வான் எனப்படும் சிப்பாய் அவரின் தலையில் மூன்று துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு அங்கு நிலத்தில் புதைக்கப்பட்டார் குறித்த படுகொலை நடத்தப்பட்டதாக அதற்குப் பொறுப்பாக இருந்த உயரதிகாரி தன்னிடம் தெரிவித்ததாகவும் கடற்படைச் சிப்பாய் பிரியசாந்த தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

பிரகீத் எக்னெலிகொடவின் தலையில் துப்பாக்கிச் சூடு நடத்திய ரில்வான் எனப்படும் கொலையாளியும் பின்னொரு காலத்தில் மர்மமான முறையில் வாகன விபத்தொன்றில் கொல்லப்பட்டதாகவும் அவர் அந்த நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டதாக நம்பப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் சம்பவத்தில், முதன்முறையாக அவர் படுகொலை செய்யப்பட்டதாக நம்பகமான ஒரு தகவல் முதல்தடவையாக கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி துணிச்சல் மிகு பத்திரிகையாளர் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்த "கொலையாளி" கோட்டாபாயவினால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற ஊகம் அப்போது வெளியாகி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# இழுவைமடி படகுகள் மூலம் இலங்கைக் கடலில் மீன் பிடிக்கும் படகுகளின் உரிமை இந்திய அரசியல்வாதிகள் மற்றும் பெரும் தொழிலதிபர்களுக்கு சொந்தமானது

## உண்மையைப் போட்டுடைத்த இலங்கை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்



இழுவைமடி படகுகள் மூலம் இலங்கைக் கடலில் மீன் பிடியில் ஈடுபட அனுப்பப்படும் இந்த மீன்பிடி முறைமையை நிறுத்த வேண்டும் எனக் கூறிய இலங்கையின் கடற் தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், கடலுக்கு அடியில் வலைகளைப் பயன்படுத்தும் இழுவைமடி படகுகள் மூலம் இலங்கைக் கடலில் மீன் பிடியில் ஈடுபட அனுப்பப்படுவது இந்திய கூலித்தொழிலாளர்களே எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த படகுகளின் உரிமை இந்திய அரசியல்வாதிகள் மற்றும் பெரும் தொழிலதிபர்களுக்கு சொந்தமானது என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

"அந்த செயற்பாடு என்பது தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒன்று. ஆனால் அந்த இழுவைமடியில் இழுவைப் படகுகளில் வருகின்றவர்கள் மீன் பிடிக்க வருகின்றவர்கள் அங்கிருக்கின்ற கூலித் தொழிலாளர்களாகும். அந்த படகு உரிமையாளர்களை எடுத்துப் பார்க்கின்ற போது, அங்கிருக்கின்ற அரசியல்வாதிகள் அல்லது பெரும் முதலைகளாகும். ஆகவே அந்த வகையிலே நிச்சியமாக நாளைக்கு அந்த படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்ற போது, கைது செய்யப்படுகின்ற போது, மனிதாபிமான அடிப்படையில் அதில் இருக்கின்ற கூலித் தொழிலாளர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்பது தான் மனிதாபிமான நடவடிக்கையே தவிர, அல்லது இந்தியா வந்து இங்கு என்ன செய்துகொண்டு போனாலும் சரி, அவர்கள் எங்களது கடலை நாசமாக்கினாலும் சரி... இப்ப எங்களுக்கு இறால் பிடிக்கின்ற காலம் இது. இறால் பிடிக்கின்ற காலத்திலே, உண்மையிலேயே எங்களுடைய கடல்களை அழித்துக்கொண்டு போகின்ற செயல்பாடுகளை இந்திய மீனவர்கள் செய்கின்றார்கள். தமிழ்நாட்டு மீனவர்கள்."

இந்திய மீனவர்கள் நாட்டுக் கடற்பரப்பில் ஆக்கிரமிப்பு செய்வது குறித்து இந்தியாவின் அனைத்து பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் அறிந்திருப்பதாக அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

"இது தொடர்பான செயற்பாடுகள் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கும் தெரியும். தமிழ் நாட்டிலுள்ள புத்திஜீவிகளுக்கும் நன்றாகவே தெரியும். அது மாத்திரமின்றி டில்லியிலிருக்கின்ற மத்திய அரசாங்கத்திற்கும் தெரியும். அதில் இருக்கின்ற இது தொடர்பான அறிஞர்களுக்கும் நன்றாகவே தெரியும்."

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அழிவுகரமான ஆக்கிரமிப்பினால் இலங்கையின் பொருளாதாரத்திற்கு எதிர்காலத்தில் ஏற்படும் ஆபத்து குறித்தும் அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"இழுவைப் படகுகள் மூலம் இழுத்தெடுக்கப்படுவது மீன்கள் மாத்திரமல்ல, எதிர்கால தலைமுறையும், எதிர்கால வாழ்க்கையும். அந்த வகையில் இவ்வாறு அழிக்கப்படுமானால், இன்னும் 15, 20 வருடங்களுக்கு பிறகு எங்களது கடலில் எதுவுமே இல்லாது போகின்ற கடல் பாலைவனமாக மாறுகின்ற ஒரு நிலை ஏற்படும் என்பது நாங்கள் மாத்திரமல்ல, சகல அறிஞர்களுக்கும் தெரிந்த விடயமாகும்."

இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் இந்நாட்டில் உள்ள ஐம்பதாயிரம் மீனவ குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சம் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக வடக்கிலுள்ள கடற்றொழிலாளர் சங்கங்களின் தலைவர்கள் தெரிவிக்கின்றனர் என்றும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க. ஜனாதிபதியின் இந்தியாவுக்கான முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் முடிவடைந்து 15 நாட்களுக்குள் இலங்கை கடற்பரப்பில் இந்திய படகுகள் மீன்பிடியில் ஈடுபடுவது குறித்து அரசியல் தலைவர்கள் மட்டத்தில் இனி பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவுக்கும் இடையில் டெல்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் வடக்கு மீனவர்களை திருப்திப்படுத்தும் நிலையான தீர்வு கிடைக்காத நிலையில், யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அனைத்து பேச்சு வார்த்தைகளும் முடிந்துவிட்டதாக அறிவித்துள்ளார்.

"இதற்குப் பின்னர் எந்தப் பேச்சுவார்த்தையும் இல்லை. அனைத்து பேச்சுக்களும் முடிந்துவிட்டன. இதன் பின்னர் எவருடனும் பேச்சுவார்த்தை இல்லை".

கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளுக்கும் இந்திய அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுகள் தொடரும் எனவும் தொழில்நுட்பம், தொழில்சார் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் மாத்திரமே கலந்துரையாடல்கள் இடம்பெறும் எனவும் அமைச்சர் கூறுகிறார்.

வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் சட்டவிரோத இந்திய மீன்பிடி முறைகளால் கடனில் இருந்து மீள முடியாமல் தவித்து வரும் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும் அச்சம் எழுந்துள்ளது.

டிசம்பர் நடுப்பகுதியில் புதுடில்லியில் இந்தியப் பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பின் போது, இரு நாட்டுத் தலைவர்களும் கடற்றொழில் பிரச்சினையை "முக்கியமானது" என அடையாளப்படுத்தியிருந்தனர்.

மீனவர்களின் பிரச்சினைக்கு மனிதாபிமான முறையில் தீர்வு காண வேண்டும் என நாங்கள் கலந்துரையாடினோம் என இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியுடன் நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

மனிதாபிமான உதவிகளை வழங்குவது அல்லது பெறுவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாது என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கடந்த வெள்ளிக்கிழமை டிசம்பர் 27ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

"எவ்வாறாயினும், மனிதாபிமான உதவிகளை வழங்குவதா அல்லது பெறுவதா என்பது குறித்து நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை."

இலங்கை ஜனாதிபதியின் முதலாவது உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் போது, இரு நாடுகளுக்குமிடையிலான கடற்றொழிலார் பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் தீர்மானங்கள் குறித்து நாட்டுக்கு தெளிவான தகவல்கள் வழங்கப்படாமையால், வடபகுதி மீனவர்கள் தமது வாழ்வாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்ந்தும் நீடிக்குமென கவலையடைந்திருந்தனர்.

எனவே தமிழ்நாட்டு முதலமைச்சருடன் இணைந்து அமைதியான தீர்வை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடக்கிலுள்ள தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடம் மீனவர் தலைவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இந்திய மீனவர்கள் வட கடலில் மீன்பிடியில் ஈடுபடுவதை "ஆக்கிரமிப்பு" என அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

எங்களுக்கு பேசாலையிலேயே இருக்கின்ற மீனவர்களை நாங்கள் சந்திக்கின்ற போது, வல்வெட்டித்துறையில் இருக்கின்ற மீனவர்களை சந்திக்கின்ற போது, ஏனைய பிரதேசங்களில் இருக்கின்ற மீனவர்களை சந்திக்கின்ற போது, மீனவர்கள் சொல்லுகின்றார்கள், "ஐயா எங்களுக்கு இந்திய மீனவர்களின் வருகையை தடுத்து நிறுத்துங்கள். அல்லது நாங்கள் குடும்பமே தற்கொலை செய்துகொள்ளப் போகின்றோம்."

கடலைச் சுரண்டும் இழுவைமடி மீன்பிடி இந்தியாவிலும் தடை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிடுகின்றார்.

"இதே வார்த்தையை இந்திய தூதுவருக்கும் கூட நான் சொன்னேன். அது மாத்திரம் அல்ல, இந்த இழுவைப் படகுகள் என்பது இந்தியாவிலும் தடை செய்யப்பட்டுள்ளது. அவை இந்தியாவிலும் தடை செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினால், இந்தியாவில் இருக்கின்ற மீனவர்கள் கூட இதற்கு வன்மையான எதிர்ப்பை தெரிவித்திருக்கின்றார்கள்."

# தமிழரசுக்கட்சி சிதைந்ததாலும், அழிந்தாலும் பரவாயில்லை கட்சி தனது கட்டுப்பாட்டில் இருகக வேண்டும் என்பதே சுமந்திரனின் நிலைப்பாடு

இலங்கை செய்திகள் Sri Lanka News

## அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம்!



தமிழரசு கட்சி சிதைந்ததாலும், அழிந்தாலும் பரவாயில்லை, கட்சி தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதே சுமந்திரனின் நிலைப்பாடு என அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநருமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அலுவலகத்தில் 31ம் திகதி அன்று நடாத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வவுனியாவில் இடம்பெற்ற இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் சீ.வி.சிவஞானம் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அதுமட்டுமின்றி சுமந்திரன் தரப்போடு முரண்பட்ட பலரும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். அதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது முழுக்க முழுக்க ஒரு மோசமான செயற்பாடு. மத்திய குழுவை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து தனக்கு சார்பான செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளில் சுமந்திரன் மும்முரமாக இருந்துள்ளார்.

மாவை சேனாதிராசா அவர்களை மாற்றவேண்டும் என்றால், அல்லது அவர் ராஜினாமா செய்துள்ளார் என்றால் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட தலைவராக சிறிதரன் இருககின்றார்.

அவரை தலைவராக தெரிவு செய்வதுதான் ஒரு அறநெறிக்கு உட்பட்தாகும். அதை விடுத்து அதைப்பற்றி எதுவுமே பேசாமல் இன்றைக்கு சி.வி.கே.சிவஞானம் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார்.

இது தமிழரசு கட்சியில் சுமந்திரன் பிரிவினருக்கு எதிராக இருக்கின்றவர்களை அகற்றி, சிறிதரனை தனிமைப்படுத்துகின்ற ஒரு நடவடிக்கை உள்வாரியாக இடம்பெறுகின்றது என்றே நான் நினைக்கின்றேன்.

இன்னும் கொஞ்சக்காலத்தில் சிறிதரன் தனிமைப்பட்டுப் போக சிறிதரனுக்கு எதிராக ஒரு ஒழுக்காற்று தீர்மானத்தை நிறைவேற்றி அவருடைய பாராளுமன்ற உறுப்பினர் பதவியை கூட பறிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

குறைந்தது ஆறு மாதத்திற்குள் சுமந்திரன் சிறிதரனை கட்சியிலிருந்து நீக்கி அல்லது தேசிய பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சத்தியலிங்கத்தை பதவியிலிருந்து இராஜினாமா செய்யச்சொல்லி தான் அதற்கூடாக பாராளுமன்ற உறுப்பினராக வரக்கூடிய சாத்தியப்பாடுகள் இருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன்.

இன்னொரு பக்கமாக சுமந்திரன் ஊடக பேச்சாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றார். ஏற்கனவே சிறினேசன் அவர்கள் ஊடக பேச்சாளராக இருக்கின்றார். அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவும் இருக்கின்றார்.

தற்போது புதிதாக கட்சியின் பேச்சாளராக சுமந்திரன் இருப்பார் என்றும், பாராளுமன்றத்தின் ஊடக பேச்சாளராக சிறிநேசன் இருப்பாரென்றும் கூறப்படுகிறது. ஒரு கட்சிக்கு ஏன் இரண்டு ஊடக பேச்சாளர்கள்? ஒரு கட்சிக்கு ஒரு ஊடக பேச்சாளர் போதுமானதே.

சுமந்திரனுக்கு பதவி கொடுக்க வேண்டும் என்பதற்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நான் நினைக்கின்றேன். தமிழரசு கட்சியின் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம் மாவை சேனாதிராசா தான் என சாணக்கியன் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றார்கள்.

மாவை சேனாதிராசாவில் விமர்சனங்கள் இருக்கின்றன என்பது உண்மை. ஆனால் இந்த போக்குகள் எல்லாவற்றிற்கும் மூல காரணம் சுமந்திரன் தான் என்பது இன்றைக்கு வெட்ட வெளிச்சமான உண்மையாகும்.

இதிலே தமிழரசு கட்சி என்பது ஒரு பாரம்பரிய கட்சி, அதற்கு ஒரு வரலாறு இருக்கிறது, அதற்கு வடக்கு கிழக்கு கட்டமைப்பு இருக்கிறது. அது பலவீனப்பட்டு செல்வது தமிழ் அரசியலை பலவீனப்படுத்துவது தமிழ் அரசியலை பலவீனப்படுத்தும் ஒரு செயலாகும்.

ஆகவே தமிழரசு கட்சியை பாதுகாக்கின்ற நடவடிக்கையை கட்சிக்காரர்கள் செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. எனவே வெளியிலிருந்து மக்கள் ஒரு பலமான அழுத்தத்தை கொடுப்பதன் ஊடகவே இதனை முன்னேற்றமுடியும் என நான் கருதுகின்றேன்.

அதிலிருந்து நாம் தவறுவோமாகவிருந்தால் ஒரு குறுகிய காலத்திலேயே இலங்கை தமிழரசு கட்சி வடக்கிலே இருந்த இடம் தெரியாமல் அழிந்து போகக்கூடி ஒரு சூழல் வரலாம் என்பதே எனது நிலைப்பாடு. இந்தப் போக்கை தமிழ் மக்கள் அனுமதிக்கப்போகிறார்களா என்பதுதான் எனது கேள்வி.

இதில் தெளிவாகத் தெரிகின்ற ஒரு விடயம் இது ஒரு கொள்கைப் பிரச்சினை. தமிழரசு கட்சியும் தமிழ் தேசிய அரசியலும் இதுவரை பின்பற்றிய அரசியலை கைவிட்டு இன்னோர் அரசியலை கொண்டு செல்வதற்காக குறிப்பாக இறைமை அரசியலை கைவிட்டு ஒரு சிறுபான்மை இனம் என்ற அடிப்படையில் ஒரு அரசியலை கொண்டு செல்வதற்கும், இணக்க அரசியலை கொண்டு செல்வதற்க்காகவும் சுமந்திரன் இந்த வேலையை செய்கிறார்.

இந்த பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும் ஏன்பதே எனது நிலைப்பாடாகும் என்றார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மகளை தனியார் கல்வி நிலையத்திற்கு அழைத்துச் செல்ல முயற்சித்த ஊரெழு கிழக்கு பகுதியைச் சேர்ந்த தந்தை கிருஷ்ணன் கிருபரஞ்சன் உயிரிழப்பு!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில், மகளை தனியார் கல்வி நிலையத்திற்கு அழைத்துச் செல்ல முயற்சித்த தந்தை ஒருவர் மயக்கமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இதன்போது ஊரெழு கிழக்கு ஊரெழு பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணன் கிருபரஞ்சன் (வயது 38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் 30ம் திகதி திங்கட்கிழமையன்று காலை மகளை கல்வி நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கு மோட்டார் சைக்கிளை எடுத்துள்ளார். இதன்போது அவருக்கு உடல் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு வந்து கதிரையில் இருந்தவேளை மயக்கமடைந்துள்ளார்.

இந்நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அன்று மாலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சடலம் மீது உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# உயர்தர பரீட்சை திருப்திகரமாக அமையவில்லை என்ற விரக்தியில் யாழ்ப்பாணத்தில் மாணவி உயிர்மாய்ப்பு!

க.பொ.த உயர்தரப் பரீட்சை திருப்திகரமாக அமையவில்லை என்ற விரக்தியில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மாணவி உயிர்மாய்த்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையினை திருப்திகரமாக எதிர் கொள்ள முடியவில்லை என்ற விரத்தியில் யாழ்ப்பாணத்தில் மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். இதன்போது தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியில் கல்வி பயின்ற சிறிகேசவன் ஸ்ரெபிகா (வயது 19) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த மாணவி 30ம் திகதி தி பரீட்சைக்கு தோற்றிவிட்டு வீட்டுக்கு வந்துள்ளார். அன்றைய பரீட்சை திருப்திகரமாக இல்லை என தாய் - தந்தையருக்கு கூறி கவலையடைந்துள்ளார். பின்னர் அவரது தந்தை அலுவலாக வெளியே சென்றவேளை குறித்த மாணவி வீட்டில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயவாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த மாணவி க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 7ஏ 2பி சித்திகளை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்டாவளையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடிய சிறுவர்கள்!

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்டாவளை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடிய சிறுவர்கள் இருவர் பொலிஸ ரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், 30ம் திகதி திங்கட்கிழமையன்று கண்டாவளை கொம்படி அம்மன் கோவிலுக்கு முன்பாக கடற்கரையோரத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் அந்த மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மோட்டார் சைக்கிளின் உரிமையாளரால் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இருப்பினும் குறித்த பகுதி கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதி என்பதால் இச்சம்பவம் குறித்து தர்மபுரம் பொலிஸாரால் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் இது குறித்து, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராசா தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், மருதங்கேணி பிரதேசத்தை சேர்ந்த 15 மற்றும் 16 வயதுடைய இரண்டு சிறுவர்கள் பொலிஸ ரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன் மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சிறுவர்கள் இருவரும் 31ம் திகதி அன்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் இருவரும் சிறுவர்கள் என்பதனல் அவர்களை பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதியளித்தார்.

# கறைபடியாத கரங்களுடன் இருந்தால்தான் சிறப்பான சேவையைச் செய்ய முடியும் என்கிறார் வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்!



கறைபடியாத கரங்களுடன் இருந்தால்தான் பொதுமக்களுக்கு சிறப்பான சேவையைச் செய்ய முடியும். கௌரவ ஜனாதிபதி அவர்களும் இதைத்தான் வலியுறுத்தியிருக்கின்றார்கள். எங்கள் அரசாங்கப் பணியாளர்கள் மக்களுக்கு சேவைவழங்கும் வகையில் எதிர்காலத்தில் தங்களை மாற்றிக்கொள்வதற்குத் தயாராகவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சும், முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய உலக மண் தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை 31.12.2024 அன்று கடைப்பிடிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உ.மாமகேஸ்வரன் நிகழ்வின் தலைமை உரையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்துதரவேண்டும் என ஆளுநரைக் கோரியதுடன் சுற்றுலாத்துறை ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திகளை முன்னெடுக்க நிதி ஒதுக்கீடு அதிகரித்துத்தருமாறும் கேட்டுக்கொண்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தனதுரையில், நாங்கள் கல்வி கற்கின்ற காலத்தில் இவ்வாறு பல தினங்கள் கடைப்பிடிக்கப்படவில்லை. இப்போது ஐ.நா. வால் பல தினங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவ்வாறு ஒரு தினத்தை அறிமுகப்படுத்துவதென்றால் அதன் முக்கியத்தும் அல்லது பயன்பாடு இப்போது தேவைப்படுகின்றது என்பது அர்த்தம்.



இந்த மண்ணை இயற்கை சீரழிக்கவில்லை. மனிதன்தான் சீரழித்துக்கொண்டிருக்கின்றான்.

சகல வளமும் கொண்டது எங்கள் நாடு. அதைப்போல எமது மாகாணமும் சகல வளங்களையும் காலநிலையையும் கொண்டிருக்கின்றது.

அப்படியான எமது மாகாணத்தில் விவசாயிகள் தங்களை இன்னமும் ஏழை விவசாயிகள் என்று விளித்துக்கூறிக்கொண்டிருக்கின்றனர். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவேண்டும்.

அவர்களுக்கு நவீன முறைமையிலான விவசாயத்தை அறிமுகப்படுத்தவேண்டும். அவர்களின் உற்பத்தியையும், அதன் தரத்தையும் ஊக்குவிக்கவேண்டும்.

அபிவிருத்திகளை முன்னெடுக்கும்போது கண்மூடித்தனமாக எதிர்க்கின்றார்கள்.

அபிவிருத்திகளை முன்னெடுக்கும்போது ஆகக்குறைந்த சூழல் பாதிப்பு இருக்கும். அதை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக்கு குறைத்து நாம் செய்யவேண்டும். அதைவிடுத்து எல்லாவற்றையும் எதிர்க்கும் மனநிலையில் நோக்கிக் கொண்டிருந்தால் நாம் முன்னேற முடியாது.

அதிகாரிகளுடன் போராடவேண்டியிருப்பதாக அமைச்சர்களே கூறியிருக்கின்றனர். அது உண்மைதான். பல அதிகாரிகள் பிழையானவற்றுக்கு பழகிவிட்டார்கள். அவர்களை அதிலிருந்து மாற்றுவதற்கு பாடுபடவேண்டியிருக்கின்றது.

எங்கள் வடக்கு மாகாணமும் அதிலிருந்து விதிவிலக்கானது அல்ல. நேர்மையானவர்கள் பழிவாங்கப்படுகின்றார்கள் அல்லது பந்தாடப்படுகின்றார்கள். அதைப்போலத்தான் வசதிபடைத்த - செல்வாக்கானவர்கள் அரச திணைக்களங்களுக்கு வந்தால் அவர்களுக்கு மரியாதையுடன் விரைந்து சேவை வழங்கும் அதிகாரிகள், ஏழை எளிய மக்கள் வந்தால் அலைக்கழிக்கின்றனர். இந்த நிலைமை மாறவேண்டும்.

புதிய அரசாங்கம் மக்கள் நேய சேவையைக் கொண்டு செல்லவே விரும்புகின்றது. அரச அதிகாரிகள் அதற்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொள்ளவேண்டும், என்று ஆளுநர் குறிப்பிட்டார்.





இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் ஆ.சிறி ஆகியோர் கலந்துகொண்டனர். உலக மண் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# புதிய ஆண்டு பிறக்கும் போதும், நாங்கள் வாழும் சூழலில் எத்தனையோ போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன

## மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை



**- எஸ்.ஆர்.லெம்பேட் (31-12-2024)**

புதிய ஆண்டு பிறக்கும் போதும், நாங்கள் வாழும் சூழலில் எத்தனையோ போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதனால் மக்கள் கொல்லப் படுவதோடு, அனாதைகளாக இடம் பெயர்கின்றனர்.

எனவே ஜுபிலி ஆண்டில் உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதங்கள் நிரம்ப கிடைக்க வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கையில், 2025 ஆம் ஆண்டு எங்களுக்கு புத்தாண்டாக பிறக்கிறது. இயேசுநாதர் பிறந்து 2025 ஆண்டு நிறைவேறுகின்றது என்பதை உணர்ந்து இந்த புத்தாண்டை அன்புடன் வரவேற்போம்.

நாங்கள் வாழும் சூழலில் எத்தனையோ போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. உக்கிரைன் நாட்டிற்கு எதிராக ராஸ்யா தொடர்ச்சியாக போர் தொடுத்துக் கொண்டு இருக்கிறது.

ஸ்ராயல் பாலஸ்தீனத்திற்கு எதிராக காஸாவில் போர் இடம் பெறுகின்றது. இந்த போரின் போது அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர்.

தமது உடைமைகளை இழக்கின்றார்கள்.பாரிய துக்கத்துடன் அவர்கள் வேறு இடங்களுக்கு பாதுகாப்பு தேடிச் செல்கின்றனர். அவர்கள் எல்லாம் அனாதைகள் போல் பல இடங்களில் கூடி இருக்கிறார்கள்.

எனவே பிறந்துள்ள புத்தாண்டு 2025 ஆம் ஆண்டு திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களினால் யூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்த யூபிலி ஆண்டின் ஆசீர்வாதங்கள் உங்கள் அனைவருக்கும் நிரம்பக் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

பிறந்துள்ள 2025 ஆம் ஆண்டு உங்கள் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான எதிர்பார்ப்பு தரக்கூடிய ஒரு ஆண்டாக அமைய வாழ்த்துகிறேன். என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் கடும் மழைக்கு மத்தியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி

**- எஸ்.ஆர்.லெம்பேட் (01-01-2025)**

மன்னார் மறைமாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி கடும் மழைக்கு மத்தியில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.



31ம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 11.45 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.



இதன்போது திருப்பலியின் ஆலயத்திற்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசேட பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

மேலும் குறித்த திருப்பலியில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# வடக்கு மாகாணத்தின் முக்கிய சொத்து கல்வி

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

வடக்கு மாகாணத்தின் முக்கிய சொத்து கல்வி. ஏந்தவொரு பிரதேசமும் அபிவிருத்தியடைவதற்கு கல்விதான் இன்றியமையாதது எனக் குறிப்பிட்ட வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள், கல்வியில்லாமல் எதுவும் செய்யமுடியாது என்றார்.

வடக்கு மாகாண சபையால் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகங்களில் கல்விபயிலும் தேவையுடைய மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் புதன்கிழமை அன்று காலை (01.01.2025) வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலர் பொ.வாகீசன் தலைமையில் இடம்பெற்றது.

சமூகசேவைகள் திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டு இன்னமும் காத்திரமுள்ளதாக மாற்றுவோம் என அமைச்சின் செயலர் பொ.வாகீசன் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் தனது உரையில், வடக்கு மாகாணத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கே இந்த நிதி உதவி வழங்கப்பட்டு வரும் நிலையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆனால் வெளிமாகாணங்களில் கல்வி பயிலும் மாணவர்களும் தங்களை இந்தத் திட்டத்தில் உள்ளீர்க்க கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும், எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தை மீளாய்வு செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா தனதுரையில், வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவன் என்றும், அவர்கள் அரச சேவையில் காலடி எடுத்து வைத்த காலம் நெருப்பாற்றை நீந்திக் கடக்கவேண்டிய காலம் எனவும் குறிப்பிட்டதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் நன்கொடைத் திட்டங்களைப்பார்த்து பலரும் வியப்பதாகவும் குறிப்பிட்டார். வவுனியாப் பல்கலைக்கழக துணைவேந்தர் சார்பில் கலந்துகொண்ட பீடாதிபதி தனது உரையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வடக்கு மாகாண சபையுடன் ஏற்கனவே இணைந்து செயற்படுவதைப்போல தமது பல்கலைக்கழகமும் எதிர்காலத்தில் இணைந்து செயற்படும் என்று குறிப்பிட்டார்.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில், யாழ்ப்பாண மாவட்டச் செயலராக தான் பணியாற்றிய காலத்தில் புலம்பெயர் தேசத்திலிருந்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன என்பதைக்குறிப்பிட்டார்.

தற்போது இங்குள்ள ஆலயங்களில் எப்படிப் பிளவுகள் இருக்கின்றனவோ அதைப்போல புலம்பெயர் தேசங்களிலும் பிளவுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி அதன் காரணமாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு கிடைக்கப்பெற்ற உதவிகள் சில இல்லாமல் போயுள்ளன எனவும் ஆளுநர் கவலை வெளியிட்டார்.

தமது அரச சேவையின் ஆரம்ப காலங்களில் அளவெட்டியிலிருந்து குறிகாட்டுவான் வரையில் துவிச்சக்கரவண்டியில் பயணித்து அந்த துவிச்சக்கரவண்டியையும் குமுதினிப் படகில் ஏற்றிச் சென்று நெடுந்தீவில் பணியாற்றியதை நினைவுகூர்ந்தார். அவ்வாறு பணியாற்றியமையால்தான் எதையும் செய்யக்கூடிய மனநிலை, எதையும் செய்யும் துணிவு வந்தது எனக் குறிப்பிட்ட ஆளுநர், உயிரைப் பணயம் வைத்து பணியாற்றியமையையும் அதன் ஊடாக மக்களுக்கு பல சேவைகள் செய்தமையையும் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 722 மாணவர்கள் இந்தத் திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவர்களில் நூறு பேருக்கு 01-01-2025 அன்றைய தினம் சம்பிரதாயபூர்வமாக அவை வழங்கப்பட்டன.



# கிளிநொச்சியில் கடை உடைத்து அலைபேசி மற்றும் கடிகாரங்கள் என்பன திருட்டு!

31-12-2024 நள்ளிரவு கிளிநொச்சி கனகபுரம் வீதியில், புகையிரத கடவைக்கு அருகாமையில் இயங்கி வந்த கையடக்க தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அதில் இருந்த பொருட்கள் களவாடப்பட்டிருந்தன.

இது குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையிலான குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆரம்பகட்ட விசாரணையில், கடையில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் இருபது வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்கள் குறித்த திருட்டில் ஈடுபட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் ஒரு இலட்சம் ரூபா மதிக்கத்தக்க கைப்பேசி மற்றும் எஅயசவ நயவஉாநள என்பன களவாடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

# மியன்மாரிலிருந்து தப்பி வந்த அகதிகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மன்னிப்பு கோரிய இலங்கை குடிவரவு அதிகாரி

இலங்கை செய்திகள் Sri Lanka News



யுத்த அனாதைகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாமிற்குள் பிரவேசித்து அவர்களுக்கான நலன்புரி விடயங்களை பார்வையிடச் சென்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டமைக்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் வருத்தம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு விமானப்படை தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குழந்தைகள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மியன்மாரில் இருந்து தப்பி வந்த புகலிடக் கோரிக்கையாளர்களின் தடுப்பு நிலைமை மற்றும் நலன்களை பரிசோதிக்கச் சென்ற ஒரு வைத்தியர் மற்றும் ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி ஆகியோரை விமானப்படை அதிகாரிகள் தடுத்ததாக ஆணைக்குழு அண்மையில் தலைமைத் தளபதியான ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தது.

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் உத்தரவிற்கு அமைய பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த விமானப்படைத் தளத்தின் பொறுப்பதிகாரி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு, அந்த புகலிடக் கோரிக்கையாளர்களை யாரும் அணுக அனுமதிக்கக் கூடாது என குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் இருந்து உத்தரவு கிடைத்துள்ளதாக தெரிவித்தார்." என ஆணைக்குழுவின் தலைவர், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி, எல்.டி.பி தெஹிதெனியா டிசம்பர் 27 எழுதிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

அதன் பின்னர், ஆணைக்குழுவினால் நுழைவு அனுமதி கோரி எழுதப்பட்ட கடிதத்திற்கு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் நிலூஷா பாலசூரியவிடமிருந்து எழுத்துமூலமான பதில் கிடைக்கவில்லை.

தமது கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகளை டிசம்பர் 31ஆம் திகதி காலை 10.30 மணிக்கு விளக்கமளிப்பதற்காக அழைத்திருந்தது.

"இன்று, ஆணையாளர் நாயகம் அது குறித்து வருத்தம் தெரிவிப்பதாக எங்களுக்குத் தெரிவித்தார். முக்கியமாக இங்கு வந்திருப்பவர்கள், இங்கு பாதுகாப்பு தேடி வந்திருக்கும் இவர்களால் ஏதாவது நோய் பரவ வாய்ப்புள்ளது என்ற காரணத்தினால்தாள் தான், எவருக்கும் பார்க்க அனுமதி வழங்கவில்லை," என அவர் குறிப்பிட்டார்.

அகதிகளை பார்வையிடச் சென்றபோது அவ்வாறான காரணத்தை அங்குள்ள அதிகாரிகள் தெரிவிக்கவில்லை என, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆய்வு மற்றும் கண்காணிப்புப் பிரிவின் பணிப்பாளர் நிஹால் சந்திரசிறி ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியா அகதிகளை பரிசோதனை செய்வதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு தேவையான வசதிகளை வழங்க குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் இணங்கியுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

"ஆனால் இப்போது அவர்கள் தேவையான சுகாதார வசதிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளனர், எனவே அந்த மக்களை பரிசோதிக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு தேவையான வசதிகளை வழங்க அவர்கள் ஒப்புக்கொண்டனர். அதன்படி, எதிர்காலத்தில் தேவையான பணிகளை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம்."

விமானப்படை அதிகாரிகள் மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகளும் தமது கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமைக்கான காரணங்களை முன்வைக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வருகை தந்திருந்ததாக, ஆணைக்குழுவின் தலைவர், முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி எல்.டி.பி.தெஹிதெனிய குறிப்பிடுகின்றார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் இடத்தை ஆய்வு செய்வதற்கான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்களையும் ஆணைக்குழுவின் தலைவர் கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு நினைவூட்டியிருந்தார்.

"மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தின்படி, நீதிமன்ற உத்தரவு அல்லது வேறு வழிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எந்தவொரு நபரையும் விசாரிக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அரசியல் அமைப்பின் ஊடாக அதிகாரம் காணப்படுவதோடு, எந்த இடத்திற்கும் சென்றும் ஆய்வுகளை மேற்கொள்ளவும் முடியும். இந்த அரசியலமைப்பு அதிகாரத்தின் கீழ் தான் இவர்கள் சோதனைக்கு சென்றனர். ஆனால் அதற்கான வாய்ப்பு கிடைக்காததால் அதற்கான காரணங்களைக் கேட்கவே இந்த பேச்சு நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு விமானப்படை தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 103 பேரில் நாற்பதுக்கும் மேற்பட்ட குழந்தைகளில் பெரும்பாலானோர் கைக்குழந்தைகள் என மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மேலும் 12 பேர் திருகோணமலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

டிசம்பர் 19 அன்று, முல்லைத்தீவு கடற்கரையில் சிக்கித் தவித்த மியன்மார் போரில் இருந்து தப்பி வந்த 115 ரோஹிங்கியா அகதிகள், போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு தமிழ் மீனவர்கள் குழுவால் மீட்கப்பட்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் புதிய ஆண்டுக்கான வேலைகள் ஆரம்பம்!

பு. கஜிந்தன்



யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் 2025ம் ஆண்டுக்கான புதிய வேலை ஆரம்பநாளின் உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு 01-01-2025 அன்று காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலக முன்றலில் இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட செயலக முன்றலில் தேசிய கொடியினை பதில் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் எற்றிவைத்தார். பின்பு தேசியகீதம் இசைக்கப்பட்டது. இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதை தொடர்ந்து அரச உயர் அதிகாரிகள், பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலர்கள் இணைந்து புதிய வேலைகளை ஆரம்பிக்கும் நாளான அன்று சத்தியப்பிராமணம் எடுத்துக்கொண்டனர்.

அதன்பின்னர் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஒன்று கூடிய அரச அதிகாரிகள், பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலர்கள் ஆகியோர், வருட ஆரம்ப நாள் தொடர்பாக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, ஜனாதிபதி செயலகத்தில் ஆற்றிய உரையினை காணொளி மூலமாக கண்டுகளித்தனர்.





இவ்நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.ஸ்ரீமோகனன், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரன், மாவட்ட செயலக பதவிநிலை உதவி பணிப்பாளர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலகர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் புதுவருட கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு!

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் புதுவருட கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

2025ம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு இன்று வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

வருடத்திற்கான முதல்நாள் கடமைகளை ஆரம்பிக்கும் அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது புதிய ஆண்டினை வரவேற்று தமது கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக காலை 8.30 மணிக்கு பிரதேச செயலாளரால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்ட பின்னர், தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் அனைவரும் “தூய்மையான இலங்கை” (Clean Sri Lanka) திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர்.






மேலும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது “க்ளீன் ஸ்ரீலங்கா” தேசிய வேலைத் திட்ட நிகழ்வில் உத்தியோகத்தர்கள் நேரலை ஊடக இணைந்திருந்தனர்.

நிகழ்வில் பிரதேசசெயலாளர் சி.சத்தியசீலன் அவர்கள் 2025ம் ஆண்டிற்கான கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து சிறப்புரை ஆற்றியிருந்ததுடன் இந்த வருடம் அனைவரது வாழ்வில் மிகுந்த சந்தோசங்களையும் வளங்களையும் கொண்டுவரவேண்டுமென புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேசசெயலாளர் பசுபதி தயானந்தன் கணக்காளர் ம.சிவகுமாரன் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், நிர்வாக உத்தியோகத்தர் மா.முரளி, நிர்வாக கிராம அலுவலர் சோ.சிவலிங்கம், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் அ.ரவிச்சந்திரன் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், மற்றும் செயலக உத்தியோகத்தர்கள் கிராமஅலுவலர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# "கிளீன் ஸ்ரீலங்கா" ஆரம்பத்திலேயே சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுலா இலக்குகள் பற்றி அரசாங்கத்திடம் கேள்வி



யானை மனித மோதலினால் உயிரிழந்த மக்கள் மற்றும் யானைகளின் எண்ணிக்கை தொடர்பான புள்ளி விபரங்களை மேற்கோள்காட்டி, புத்தாண்டின் ஆரம்ப தினத்தன்று சுற்றுச்சூழலை மீளமைக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்திய நிலையில், அண்மையில் சொந்த மண்ணில் இருந்து வெளியேற்றப்பட்ட யானைகள் கூட்டமொன்று அரச நிறுவனத்தினால் பட்டினியுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைப்பு ஒன்று அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட யானைகளில் ஜனாதிபதியின் பிரதேசத்தில் இருந்து துரத்தப்பட்ட காட்டு யானைகளும் இருப்பதாக வெளிப்படுத்தும் உஸ்ம (மூச்சு) அமைப்பு, “இந்த சூழ்நிலை தொடர்பில் சர்வதேச கவனம் ஈர்க்கப்பட்டால், இது சந்தேகத்திற்கு இடமின்றி வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் இந்த நாட்டில் விலங்குகள் நலன் தொடர்பில் ஒரு கரும்புள்ளியாக அமையும் என்பதோடு, இந்த நாட்டின் சுற்றுலாத் துறையிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்” என சுற்றுச்சூழல் அமைச்சரை எச்சரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற “கிளீன் ஸ்ரீலங்கா” நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க, சுற்றுச்சூழலை மறுசீரமைப்பது, இந்த வேலைத்திட்டத்தின் பிரதான பணிகளில் ஒன்றாக கருதப்பட வேண்டும் என்றார்.

சுற்றுலாத்துறையின் மேம்பாடு அதனுடன் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் யானை-மனித மோதலை குறைப்பதற்காக, ஸ்ராவஸ்திபுர, தம்புத்தேகம, விளச்சிய, மொரகொட மற்றும் தந்திரிமலை ஆகிய பகுதிகளில் இருந்து, பெண் மற்றும் குட்டிகள் உள்ளிட்ட சுமார் 150 யானைகளைக் கொண்ட கூட்டத்தை வில்பத்து தேசிய பூங்காவிற்கு விரட்டும் தோல்வியுற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, ஜனவரி 2ம் திகதி அன்றைய தினம்உஸ்ம அமைப்பு சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க படபெதிக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒயாமடுவ தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் விவசாய பண்ணை வளாகத்தில் ஒரு வாரத்திற்கும் மேலாக குறித்த யானைகள் சிக்கியுள்ளன.

தற்போது யானைகள் கூட்டமாக இரவு நேரத்தில் உணவு தேடி கிராமத்திற்குள் நுழைவதையோ அல்லது அதன் இயற்கையான இடம்பெயரும் பாதைகளை பின்பற்றி கரும்பு தோட்டத்திற்குள் நுழைவதையே தடுக்கும் வகையில் யானை கூட்டத்தை கரும்புத் தோட்ட வளாகத்தில் அடைத்து வைத்துள்ளதாக உஸ்ம அமைப்பின் தலைவர் கெலும் மகேஷ் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அதிக யானைகள் கூட்டமாக மிகச்சிறிய பகுதியில் நீண்ட நாட்களாக சிக்கித் தவிப்பதால் பட்டினியால் வாடுவதாகவும் குறிப்பாக குட்டிகள் இறக்கும் அபாயம் இருப்பதாகவும் அமைச்சருக்கு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தச் சூழலைச் சமாளிப்பதற்கு, யனைகள் கரும்பு தோட்ட வளாகத்திலிருந்து இயற்கையாக இடம்பெயர்ந்து செல்வதற்கும், இடம்பெயர்வதைக் கண்காணித்து, வழியில் உள்ள சொத்துக்கள் மற்றும் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது பொருத்தமான விடயமாக அமையுமென அவர் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறித்த ஆலோசனையை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதியின் பிரதிநிதி மற்றும் பிரதேசத்திலுள்ள ஏனைய உயர் அரச அதிகாரிகள் அக்கறை காட்டாத காரணத்தினாலேயே யானைகள் உணவின்றி சிறைப்பட நேரிட்டுள்ளதாக கெலும் மகேஷ் அக்கடிதத்தில் சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க படபெதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

“கிராம மக்களும், வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளும் கூட இந்த முன்மொழிவை ஏற்றுக்கொள்கிறார்கள், ஆனால் அப்பகுதிக்கு பொறுப்பான ஆளுநர், மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் போன்ற அரசாங்கத்தின் உயர் நிர்வாக அதிகாரிகள் அதை செயல்படுத்துவதில் ஆர்வம் காட்டாமையால் யானைள், உணவின்றியும் மற்றும் கடுமையான மன அழுத்தத்துடனும் அந்த பிரதேசத்தில் சிறைபப்பட்டுள்ளன.”

தயவு செய்து இது குறித்து கவனம் செலுத்தி, சிக்கிய யானைகள் கரும்பு தோட்ட வளாகத்தில் இருந்து தப்பி வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்வதற்கு தகுந்த திட்டத்தை உருவாக்கி, அதனால் மக்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க படபெதியிடம் உஸ்ம அமைப்பு இறுதியாக கோரிக்கை விடுத்துள்ளது.

“தூய்மையான இலங்கை” திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி, அழகிய நாடாக வெளிநாட்டவர்களாலும் போற்றப்படும் இலங்கையில் இன்று என்ன நடந்துள்ளது என கேள்வி எழுப்பியிருந்தார்.

தாய்நாட்டின் சுற்றாடலை மீளமைக்க வேண்டியதன் அவசியத்தை விளக்குவதற்கு ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க, 2023ஆம் ஆண்டு இந்த நாட்டில் இடம்பெற்ற யானை மற்றும் மனித மரணங்களை பிரதான உதாரணமாகக் குறிப்பிட்டார்.

“சிறந்ததொரு சுற்றுச்சூழல் கட்டமைப்பு உள்ள நாட்டில் 2023ஆம் ஆண்டு யானை - மனித மோதலால் நூற்று எண்பத்திரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 2023 ஆம் ஆண்டில் 484 யானைகள் மனிதர்களால் கொல்லப்பட்டுள்ளன. சிறந்த அழகியலுடன் கூடிய சுற்றுச்சூழல் கட்டமைப்பு இருந்தாலும் வருடத்திற்கு 484 யானைகள் இறக்கும் நாடாக இருக்கிறோம். யானைகளினால் 182 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.”

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மக்களை தேடிச் சென்று அவர்களின் பிரச்சினைகளை அறிந்து உச்சபட்ச சேவையை வழங்கவுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவிப்பு!

பு. கஜிந்தன்




பிரதேச செயலக ரீதியாக உதவி தேவைப்படும் மக்களை இனங்கண்டு தேடிச் சென்று அவர்கள் பிரச்சினைகளை அறிந்து அதற்குரிய தீர்வுகளை வழங்கக்கூடிய உச்ச கட்ட செயற்பாடுகளை முன்னடுக்கவுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் 01.01.2024 புதன்கிழமையன்று நடைபெற்ற "Clean Sri Lanka" நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் உத்தியோகத்தர்கள் இணைந்து கொண்ட நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "Clean Sri Lanka" நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து கடந்த 2024 ஆம் ஆண்டு அனைவரும் ஒன்று சேர்ந்து மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்யத்தக்க வகையிலே செயற்பட்டதற்கு நன்றியினை தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள் மலர்ந்திருக்கும் இனிய புதுவருடமானது அனைவருக்கம் சுபீட்சமாகவும் சந்தோசமாகவும் அமைய தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

மேலும் இவ்வாண்டு பிரதேச செயலக ரீதியாக உதவி தேவைப்படும் மக்களை இனங்கண்டு தேடிச் சென்று அவர்கள் பிரச்சினைகளை அறிந்து அதற்குரிய தீர்வுகளை வழங்கக்கூடிய உச்ச கட்ட செயற்பாடுகளை முன்னடுக்கவுள்ளதாகவும், இதற்கு அரச உத்தியோகத்தர்களாகிய உங்கள் ஒவ்வொருவரது ஒத்துழைப்பும், பங்களிப்பும் தேவைப்படுவதாகவும் இதன் மூலம் மக்களின் தேவைகளை அறிவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும், அரசாங்க அதிபர் தெரிவிக்கையில், அபிவிருத்தி சார்ந்த திட்டங்களை எமது மாவட்டத்தில் முன்னெடுக்கும் போது ஈடுகொடுக்கக் கூடியதாகவும், பயனுறுதி வாய்ந்ததாகவும், மக்கள் மயப்படுத்தப்பட்டதாகவும், வகுக்கப்பட்டு முன் தயார் படுத்தலுடன் நடைமுறைப்படுத்துவதன் மூலம் வெற்றியடைய முடியும் எனவும், மக்களின் முறைப்பாடுகளை தனி ஒருவராலோ அல்லது ஒரு திணைக்களத்தினாலோ பூர்த்தி செய்ய முடியாது மாறாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செற்படும் போது பயனைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், மலர்ந்திருக்கும் 2025 ஆம் ஆண்டு முன்னெடுக்கவுள்ள செயற்றிட்டங்களில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து வினைத் திறனாகவும், விளைத்திறனாகவும் மாவட்ட மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதாக இன்று உறுதி மொழியை எடுத்துள்ளோம் எனவும், இதற்கிணங்க Clean Sri Lanka செயற்திட்டத்தின் நோக்கமாக "ஒரு வளமான நாடு அழகான வாழ்க்கைக்கு" என்ற அடிப்படையில் நாம் அனைவரும் இந்த செயற்றிட்டத்தை மாவட்டத்தில் முன்னெடுப்பதற்கு திடசங்கற்பம் பூணவேண்டும் எனத் தெரிவித்தார்.

அரசசேவை உத்தியோகத்தர்களாகிய நாம் எமது செயற்பாடுகளை சரியான திட்டமிடலுடன் கூடிய முன்னெடுப்புக்களை மேற்கொள்வதன் மூலம் மாவட்ட மக்களுடைய சமூக, பொருளாதார, கல்வி, கலாசார, பண்பாட்டு, அபிவிருத்திசார் திட்டங்களில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் மாவட்ட மக்கள் சுபீட்சமாகவும் சந்தோசமாகவும் தங்களுடைய வாழ்க்கையை மலரச்செய்வதற்கான பங்களிப்பை நாம் வழங்க வேண்டும் என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும், Clean Sri Lanka செயற்றிட்டமானது முன்மாதிரியாக செயற்படல், ஊக்கமளித்தல் ஈடுகொடுத்தால் ஊடாக சமூக ஒன்றின் நடைமுறையிலான மாற்றங்களை ஏற்படுத்தும் பலமான அணுகுமுறை ஒன்றை அடையக்கூடியதாக இருக்கும் இதன் மூலம் ஒருநாட்டின் சமூக, பொருளாதார கலாசார, நெறிமுறைகள் மற்றும் சுற்றாடல் ரீதியான முன்னோக்கிச்செல்லும் நிகழ்ச்சி திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டும் எனவும், தேசிய ரீதியில் இவ்வாறான தொரு நிகழ்ச்சி திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் தேவை அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சி திட்டத்துடன் இணைந்து இன மத பேதமின்றி அரச உத்தியோகத்தர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து மாவட்ட மக்கள் திருப்தியடையக்கூடிய வகையில் அர்ப்பணிப்பாக செற்பட வேண்டும்.

எனவும், மாவட்ட மக்கள் அனுபவித்த கடந்த கால இன்னல்களை கருத்தில் கொண்டு அனுசரித்து திருப்திகரமாக சேவையாற்ற வேண்டும் எனவும் இயலுமான வகையில் மக்களின் கோரிக்கைகளை அணுகக்கூடிய வகையில் அரச சேவை பொறிமுறையினை மாற்றியமைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



# அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்குமிடையே சந்திப்பு!

அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் 1ம் திகதி புதுவருடத்தினன்று புதன்கிழமை இடம்பெற்றது.

வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்கள ஆணையாளரால், திணைக்கள ரீதியான செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் ஆளுநருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால், வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற ஆயுள்வேத வைத்தியசாலை தொடர்பான தேவைப்பாடுகள், வைத்திய அதிகாரிகள் எதிர்நோக்குகின்ற சவால்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டது.

குறிப்பாக கிளிநொச்சி, மன்னார், முல்லைதீவு மாவட்டங்களில் காணப்படும் ஆயுள்வேத வைத்தியசாலைகளில் வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறை நிலவுவதாகவும் அதற்கு ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர்களை உள்வாங்குதல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

ஆயுள்வேத வைத்தியர்களின் இடமாற்றம், வைத்தியர்களின் தற்காலிக இணைப்பு ஆகியவற்றில் வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும் என சங்கத்தினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும், ஆயுள்வேத வைத்தியசாலைகளில் பணியாற்றும் வைத்தியர்களின் தரப்படுத்தல் தொடர்பான கோரிக்கையை சாதகமான முறையில் அணுமாறு ஆளுநர் ஆணையாளருக்கு அறிவுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலர் - நிர்வாகம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் உதவிச் செயலர், வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்தின் ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மறுக்கப்படுகிறன என்கிறார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண இணைப்பாளர் கனகராஜ்



இலங்கை அரசியலமைப்பு மற்றும் சுற்றுநிருபங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் வழங்கப்பட்ட போதிலும் நடைமுறையில் அது மறுக்கப்படுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

அண்மையில், சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமைகளை பாதுகாக்கும் முகமாக உரிமைகளை இழக்கும் விளிம்பில் உள்ளவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி வருகிறது.

அந்தவகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கையில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு விசேட வேலைத் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள் கல்வி கற்பதிலிருந்து தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்வது வரை அவர்களுக்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பு மற்றும் சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டும் அவர்கள் நடைமுறையில் பல்வேறு பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றனர்.

குறிப்பாக கூற வேண்டுமானால் இலங்கை அரச வேலைவாய்ப்பை பெறுபவர் எப்பாகத்திலும் கடமையாற்ற வேண்டும் என கூறப்படுகிறது அதுமட்டுமல்லாது தேக ஆரோக்கியம் தொடர்பிலும் வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகள் புறக்கணிக்கப்படுவதற்கு ஒரு காரணமாக அமைகிறது.

இவ்வாறானநிலையில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு இலங்கை அரசாங்கத்திற்கு 9 பிரிவுகளின் கீழ் விரிவான அறிக்கையொன்றினை வழங்கியுள்ளது.

குறிப்பாக வலுவிழந்தவர்களின் உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது அவர்களுக்கான வேலை வாய்ப்பினை எவ்வாறு வழங்குவது சித்திரை வகைகளில் இருந்து அவ்வாறு பாதுகாப்பது மற்றும் பாரபட்சங்களில் இருந்து எவ்வாறு விடுவிப்பது போன்ற விடயங்களை உள்ளடக்கி மனித உரிமைகள் ஆணைக்குழு விசேடமான ஒரு வேலை திட்டத்தினை நடைமுறைப்படுத்த உள்ளது.

அரச கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகள் அல்லது வலுவிழந்தவர்கள் தாமாக சென்று தமது சேவைகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் இருந்தும் தற்போது புதிய கட்டடங்கள் கட்டப்படும் போது குறித்த நடைமுறைகளை கடைப்பிடிப்பது குறைவாக உள்ளது.

ஆகவே வட மாகாணம் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் பல ஆயிரம் மாற்றுத்திறனாளிகள் உள்ள நிலையில் அவர்களின் தேவைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசேடகவனம் செலுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவருக்கும் கேதீஸ்வரனுக்கும் இடையே கலந்துரையாடல்!

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவருக்கும் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அவர்களுக்கும் இடையில் கடந்த 30ம் திகதி கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்கள் எதிர் நோக்கும் சுகாதார ரீதியான சவால்களை நிவர்த்தி செய்ய வேண்டுகோள் விடப்பட்டது. பாடசாலையின் சிற்றூண்டிசாலையின் தரத்தை உயர்த்துதல், விரைவு உணகளையும் எண்ணெய் உணவுகளையும் பொதிசெய்த உணவுகளையும் தடைசெய்தல். கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து தூய்மைப்படுத்தல், தூயநீரினை உறுதிப்படுத்தல், பெண்பிள்ளைகள் மத்தியில் அதிகரித்துள்ள இமோகுளோபின் குறைபாடு, கட்டிளமைப்பருவ உணவுப்பழக்கம் என்பன பற்றி தெளிவாக பேசப்பட்டது.

அதற்கான நடவடிக்கை 2025ஆம் ஆண்டு தீவிரமாக மேற்கொன்ன நடவடிக்கை எடுக்கப்படும் என பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உறுதியாக தெரிவித்தார்.

# கடற்றொழில் அமைச்சர், ஆளுநர், மாவட்ட செயலருடன் பருத்தித்துறை – முனை கடற்றொழிலாளர்கள் சந்திப்பு!



- ந. லோகதயாளன்

## தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைப்பு

யாழ். வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை - முனை கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்குட்பட்ட மீனவர்கள் கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட செயலர் ஆகியோரை நேற்று சந்தித்து தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியதுடன் மகஜர்களையும் கையளித்தனர்.

“பருத்தித்துறை - முனை கடற்றொழிலாளர்களின் மீன்பிடி வாடிகள் அகற்றப்பட வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் இரண்டு வாரங்களின் பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கரையோரம் பேண் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை பூராகவும் கடற்கரையோரங்களில் மீனவர்களின் மீன்பிடிவாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலமே மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். இது இவ்வாறிருக்க பருத்தித்துறை - முனை கடற்றொழிலாளர்களின் கரையோர வாடிகளை மாத்திரம் அகற்றுமாறு கரையோர பேண் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது ஏன்? இதனால் எமது வாழ்வாதாரம் முற்றிலும் பாதிப்படையும்.” - என்று மீனவர்கள் அமைச்சரிடமும் ஆளுநரிடமும் மாவட்ட செயலரிடமும் முறையிட்டனர்.

இதனை உடன் நிறுத்துமாறு அமைச்சர் இ.சந்திரசேகர் குறித்த திணைக்கள அதிகாரிக்குத் தெரியப்படுத்தியதுடன் அடுத்து வரும் அமைச்சரவைக் கூட்டத்தின்போது இதற்கான தீர்மானம் எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

நாடு பூராகவும் இந்த நிலை இருக்கும்போது குறித்த ஒரு இடத்து மீனவர்களுக்கு மாத்திரம் வாடிகளை அகற்றுமாறு அரச உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தியுள்ளமையானது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டது.

# நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் நோக்கி சேவையில் ஈடுபடும் தனியார் பயணிகள் படகொன்று நடுக்கடலில் இயந்திர கோளாறு ஏற்பட்டதால் பயணிகள் அதிர்ச்சி

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி சேவையில் ஈடுபடும் தனியார் பயணிகள் படகொன்று நடுக்கடலில் இயந்திர கோளாறு ஏற்பட்ட சம்பவத்தால் பயணிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நெடுந்தீவில் இருந்து மதியம் 11:30 மணிக்கு குறிகாட்டுவான் நோக்கி சேவையில் ஈடுபட்ட கரிகணன் பயணிகள் படகானது நடுக்கடலில் பயணித்த வேளை திடீரென இயந்திர கோளாறு ஏற்பட்டு இயங்க மறுத்தது.

இதன்போது குறித்த படகில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள், தென்பகுதி மக்கள் மற்றும் உள்ளூர் மக்கள் என சுமார் 60 பேருக்கும் அதிகமானோர் பயணித்த நிலையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த படகானது கடல் கொந்தளிப்புக்கு மத்தியில் கடலில் தத்தளித்த நிலையில், இதனை அவதானித்த நெடுந்தீவு மக்கள் தமது சிறிய மீன்பிடி படகுகளை கொண்டு சென்று பயணிகளை ஆபத்திலிருந்து விரைந்து மீட்டதுடன் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் படகின் உதவியுடன் குறித்த பயணிகள் படகானது கரைக்கு கொண்டுவரப்பட்டது.

அதேவேளை, குறித்த பகுதிக்கு நெடுந்தீவு பிரதேச செயலாளர் மற்றும் ஊழியர்களும் விரைந்து சென்று நிலைமைகளை அவதானித்தனர். இச் சம்பவத்தால் படகில் பயணித்த மக்கள் பதற்றமான நிலையினை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் புலமைப் பரிசில்கள் பகிர்தல்



இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் தொழில் பணிபுரியும், பணிபுரிந்த இலங்கையர்களின் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில்கள் பகிர்தல் நிகழ்வானது மாகாண சிரேஷ்ட முகாமையாளர் திருமதி. எல். லக்சாயினி தலைமையில் 28.12.2024 அன்று காலை 09.00 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில், வெளிநாட்டில் தொழில்புரிபவர்களால் நாட்டிற்கு அந்நியச் செலாவணி கிடைத்துவருவதாகவும், பதிவு செய்து வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்வதற்கான விழிப்புணர்வுகள் அதிகம் தேவை எனவும் குறிப்பிட்டதுடன், தந்தை அல்லது தாய் தொழில் நிமித்தம் காரணமாக வெளிநாடு சென்ற நிலையில் அவர்களின் பிள்ளைகள் தமது கல்வியில் ஆர்வம் காட்டி கற்று நல்ல தேர்ச்சி பெற்றமையிட்டு பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் பாராட்டுவதாகத் தெரிவித்தார்.

மேலும், இவ் போட்டி நிறைந்த கல்விச் சூழலில் விடாமுயற்சியாக கற்று உயர்வு அடைய வேண்டும் என மாணவர்களை கேட்டுக்கொண்டதுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்படும் கல்விக்கான உதவியானது ஒரு ஊக்கப்படுத்தலாகும் எனவும், அந்த வகையில் தரம் 05 புலமைப்பரிசில் (25,000/=) பரீட்சை, க.பொ. த (சாதாரண தரம் 30,000/=) மற்றும் க. பொ. த (உயர்தரம் பரீட்சை 35,000/=) ஆகியவற்றில் அதி உயர் சித்தியடைந்த 26 மாணவர்களுக்கான ஊக்குவிப்புக்கொடுப்பனவு மற்றும் 98 மாணவர்களுக்கான ரூபா 10,000/= பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கல் என்பன மாணவர்களின் அடைவு மட்டத்தினை அதிகரிக்க துணை நிற்கும் எனவும், மேலதிக தேவைப்பாடுகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்றும் மாணவர்களுக்கு துணை நிற்கும் எனக் குறிப்பிட்டு மாணவர்களின் எதிர்கால ஒளிமயமான வாழ்க்கைக்கு தமது வாழ்த்துக்களையும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்திற்கான பொறுப்பதிகாரி. திரு. ரி. கோடீஸ்வரன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் திரு. தி. பிராங்கிளின், பணியகத்தின் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

# 19 வருடங்கள் கடந்தும் நீதி கிடைக்காத 5 திருகோணமலை புனித ஜோசப் மற்றும் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்கள் நினைவுகூறப்பட்டனர்

அரச படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு இதுவரை நீதி கிடைக்காத மாணவர்களின் நினைவாக திருகோணமலையில் நினைவேந்தல் நடத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை புனித ஜோசப் மற்றும் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்களான மனோகரன் ரஜிஹர், யோகராஜா ஹேமச்சந்திரன், சண்முகராஜா கஜேந்திரன், லோகிதராஜா ரோஹன், தங்கத்துரை சிவானந்தா ஆகியோர் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் திகதி திருகோணமலை பிரட்ரிக் கோட்டைக்கு அருகிலுள்ள கடற்கரைக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

யோகநாதன் பூங்குழலன் மற்றும் பரராஜசிங்கம் கோகுல்ராஜ் ஆகியோர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான போதிலும் உயிர் பிழைத்தனர்.

எனவே ஜனவரி 2025 2ம் திகதி அன்றைய தினம் திருகோணமலை காந்தி சிலையை அண்மித்த சுற்றுவட்டத்தில் கொல்லப்பட்டவர்களின் 19ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, அவர்களின் உருவப்படங்களுக்கு, பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மலர் மாலை அணிவித்து, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

பாதுகாப்புப் படையினருக்கும் மாணவர்களின் கொலைக்கும் தொடர்பில்லை என மகிந்த ராஜபக்ச அரசாங்கம் முதலில் கூறிய போதிலும், ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் எடுத்த மாணவர்களின் நெருக்கமான புகைப்படங்கள் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்ததை உறுதிப்படுத்தின.

இரண்டு வாரங்களின் பின்னர் ஊடகவியலாளர் சுகிர்தராஜனும் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மாணவர்களின் கொலைக்கு எதிராக பெற்றோர் நீதிமன்றத்திற்கு சென்றதால், பல அரச பாதுகாப்பு படையினர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் விசாரணைகளை நடத்தினால் பாதுகாப்பு படையினர் தைரியத்தை இழக்க நேரிடும் என மக்கள் விடுதலை முன்னணி, சிங்கள இனவாத குழுக்களுடன் இணைந்து திருகோணமலையில் போராட்டங்களை நடத்தியது. தற்போது ஆட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரான ஜனாதிபதியும் இனியும் இனவாதத்திற்கு இடமளிக்கப்போவது இல்லை என பல தடவைகள் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், “விரைவாக விசாரணை செய்து முடிக்கக்கூடியவை” என அரசாங்கம் தெரிவு செய்துள்ள நிலுவையிலுள்ள ஏழு வழக்குகளில் திருகோணமலை ஐந்து மாணவர்களின் படுகொலை வழக்கு உள்ளடக்கப்படவில்லை.



இதனிடையே, விசேட அதிரடிப் படையினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டது அரசாங்கத்திற்கு தெரியும் எனவும் ஆனால் போதிய ஆதாரங்கள் இல்லாததால் அவர்களால் வழக்குத் தொடர முடியவில்லை எனவும் அப்போதைய அமெரிக்க தூதுவர் ரொபர்ட் பிளேக்கிடம், அப்போதைய நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

“துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களின் ஆதாரங்களால் அதை நிரூபிக்க முடியாது. ஒருவேளை அவர்கள் மக்களைக் கொல்லும் போது வெவ்வேறு ஆயுதங்களைப் பயன்படுத்தியிருக்கலாம்” என அவர் கூறியதாக விக்கிலீக்ஸ் வெளிப்படுத்தியது.

அச்சுறுத்தல்களால், கொல்லப்பட்ட மாணவர்களின் பெற்றோரை அடக்கி ஆள முயன்ற மகிந்த ராஜபக்ச அரசாங்கம் பின்னர் வரப்பிரசாதங்களை வழங்கி வாயடைக்க முயன்றது.


“இந்த விவகாரத்தை மேற்கொண்டு யாரும் தொடர்வது நல்லதல்ல, எனவே இந்த முறைப்பாட்டை கைவிடுங்கள், அவ்வாறு செய்தால், கொழும்பில் இருந்து வீடு மற்றும் பாதுகாப்பை வழங்க முடியும்.” என அன்றைய மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரும் தற்போது அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவருமான மகிந்த சமரசிங்க குறிப்பிட்டதாக வைத்தியர் காசிப்பிள்ளை மனோகரன் சாட்சியமளித்துள்ளார்.

ஆனால் படுகொலை செய்யப்பட்ட மாணவன் மனோகரன் ரஜிஹரின் தந்தை வைத்தியர் காசிபிள்ளை மனோகரன், தனது புதல்வரின் கொலையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு எடுத்துச் சென்று 19 வருடங்கள் கடந்தும் நீதி கிடைக்கவில்லை.

# கடந்த ஆண்டிலிருந்து கற்றுக்கொண்டு புதிய ஆண்டை எதிர்கொள்வது

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -





**தே**சிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு ஆதரவான தமிழ் புத்திஜீவிகளில் சிலர் தமிழர் தாயகத்தில் கிராம மட்டத்தில் விவசாய அமைப்புகளைச் சந்தித்து, விவசாயிகளின் குறைகளைக் கேட்டு வருகிறார்கள். இன்னொருபக்கம் கடல் தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் சந்திரசேகரன் கடல் தொழிலாளர் சங்கங்களின் மத்தியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வலைப்பின்னலைப் பலப்படுத்தி வருகிறார்.

தேசிய மக்கள் சக்தி என்பது ஜேவிபியும் துறைசார் நிபுணர்களும் புத்திஜீவிகளும் இணைந்த ஒரு கட்டமைப்பு ஆகும். ஜேவிபியின் அரை நூற்றாண்டுக்கு மேலான அனுபவத்திலிருந்து கட்டி எழுப்பப்பட்ட ஒரு கட்டமைப்பு அது. எல்லாத் துறைகளுக்குமான கட்டமைப்புகள் தேசிய மக்கள் சக்திக்குள் உண்டு. எனவே தமிழ் பகுதிகளிலும் அவர்கள் கட்டமைப்புகளை விருத்தி செய்வார்களாக இருந்தால் அடுத்தடுத்த தேர்தல்களிலும் அவர்கள் தங்கள் வெற்றிகளை உறுதிப்படுத்திக் கொள்வார்கள்.

ஏனெனில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகளிடம் பலமான கட்டமைப்புகள் எவையும் கிடையாது. ஒவ்வொரு பிரிவினருக்குமான விசேஷ கட்டமைப்புகள் எவையும் கிடையாது. ஆனால் என்பிபி அப்படியல்ல. என்பிபி யின் அடித்தளம் ஜேவிபி. அது சீன சார்பு கொம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து தோற்றம் பெற்றது. அவர்களிடம் கொம்யூனிஸ்ட் கட்சிகளுக்குரிய அமைப்பாக்க ஒழுக்கம் உண்டு. இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கம். இரண்டு தடவைகள் நசுக்கப்பட்ட ஒரு இயக்கம். தன் சொந்த சாம்பலில் இருந்து மீண்டும் எழுந்தது. எனவே அழிவுகளில் இருந்து எழுந்த அனுபவம் அவர்களுக்கு உண்டு.

அதைவிட மேலதிகமாக இப்பொழுது என்பிபி என்ற அரசியல் இயக்கத்துள் இடதுசாரி மரபில் வராத புதுஜீவிகளும் செயற்பாட்டாளர்களும் உண்டு. உதாரணமாக இப்பொழுது உள்ள பிரதமர் டொக்டர் ஹரிணி இடதுசாரி ஒழுக்கத்துக் கூடாக வந்தவர் அல்ல. அவர் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தவர். ஆனால் புரட்சிகரமான சிந்தனைகளைக் கொண்ட ஒரு புத்திஜீவி. அவரைப் போன்றவர்களையும் சுதாகரித்துக் கொண்டு ஒரு கட்டமைப்பை உருவாக்கக்கூடிய விரிவு தேசிய மக்கள் சக்தியிடம் உண்டு. எனவே தேசிய மக்கள் சக்தியிடம் உள்ள கட்டமைப்புகள், அமைப்பாக்க அனுபவம் போன்றவற்றின் அடிப்படையிலும், கடந்த ஆண்டு அவர்கள் பெற்ற இரண்டு தேர்தல் வெற்றிகளின் அடிப்படையிலும் சிந்தித்தால், அவர்கள் தமிழ்ப் பகுதிகளில் பலமான கட்டமைப்புகளை உருவாக்க முடியும்.

தமிழ் மக்கள் மத்தியில் செயற்பாட்டு கட்டமைப்புகள் எந்த அளவுக்கு பலவீனமாக உள்ளன என்பதற்கு பல்கலைக்கழக சமூகம் குறிப்பாக மாணவ அமைப்புக்கள் ஓர் எடுத்துக்காட்டு ஆகும். பல ஆண்டுகளுக்கு முன் ஒரு ஜேவிபி முக்கியஸ்தர் எனக்கு சொன்னார், இலங்கைத் தீவிலேயே அதிகம் வினைத்திறனோடு போராட வேண்டிய ஒரு பல்கலைக்கழகம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்தான். ஆனால் அது போராட முடியாத ஒரு பல்கலைக்கழகமாகக் காணப்படுகிறது என்று. 2009க்குப்பின் யாழ் பல்கலைக்கழகம் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய போராட்டக் களங்களில் துணிந்து முன் நின்றிருக்கிறது. ஆனாலும் அண்மை ஆண்டுகளாக அது சோர்ந்து காணப்படுகிறது.

குறிப்பாக தமிழ்ப் பொது வேட்பாளரின் விடயத்தில் பல்கலைக்கழக மாணவர்களும் மக்கள் அமைப்புக்குள் காணப்பட்டார்கள். ஆனால் அவர்கள் தேர்தல் நடவடிக்கைகளில் அதிகம் ஆர்வமாகக் காணப்படவில்லை. நாங்கள் தமிழ் மக்கள் பொதுச் சபையை ஆதரிக்கிறோம் ஆனால் பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்ற ஒருவித மயக்கமான நிலைப்பாடு அவர்களிடம் காணப்பட்டது. அதாவது தேர்தல் நடவடிக்கைகளில் கட்சிகளோடு இணைந்து செயல்படுவதில் அவர்களுக்கு ஒரு வித தயக்கம் இருந்தது.

அதுமட்டும்ல்ல தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தில் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சமூகம் துலக்கமான முடிவுகளை எடுக்கவில்லை. தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்ட பொழுது பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பேரவையோடு நின்றது. ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் அவ்வாறில்லை. அரசறிவியல் துறைத் தலைவராகிய பேராசிரியர் கணேசலிங்கம் தமிழ்மக்கள் பொதுச்சபைக்குள் முக்கியஸ்தராக காணப்பட்டார். தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்புக்குள்ளும் அவர் இருந்தார். ஆனால் பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஒரு சமூகமாக தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை.

பல்கலைக்கழக புலமைசாரா ஊழியர் சங்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவாக நின்றது. அவர்கள் பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை. ஆசிரியர் சங்கத்தின் ஒரு பகுதி தெளிவாக தேசிய மக்கள் சக்தியோடு நின்றது. இன்னொரு பகுதி வழமைபோல தற்காப்பு நிலையெடுத்து நடுவே நின்றது. அங்கே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவான விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும்தான் அதிகம். ஆனால் அவர்கள் அமைப்பாக்கப் படவில்லை. ஒருங்கிணைக்கப்படவில்லை. அதனால், உதிரிகளகக் காணப்பட்டார்கள். பல்கலைக்கழக மாணவர்களும் பொது வேட்பாளரின் விடயத்தில் ஒரு சமூகமாகத் துடிப்போடு தொடர்ச்சியாகச் செயல்படவில்லை.

அவ்வாறான ஒரு பின்னணியில், தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான புத்திஜீவிகள் ஊடகங்கள் முன் தோன்றி அறிக்கை விட்டார்கள். முதலில் அவர்கள் விட்ட அறிக்கையில் துணிச்சல் குறைவாக இருந்தது. தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதனைத் தெளிவாகச் செல்வதற்கு தயங்கினார்கள். ஆனால் தேர்தல் முடிவுகளின் பின் இப்பொழுது துணிச்சலாக முன்வந்து தமிழ்த் தேசியவாத அரசியல் ஒருவித "மலட்டு அரசியல்" என்ற பொருள்பட விமர்சிக்கத் தொடங்கி விட்டார்கள்.

யாழ். பல்கலைக்கழகத்தின் நிலை இது. யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் கல்வி நிறுவனத்தில் உள்ள மாணவ ஆசிரிய சமூகங்களின் நிலை இது. இப்படித்தான் கடல் தொழிலாளர் சங்கங்கள், கூட்டுறவாளர் சங்கங்கள், விவசாய அமைப்புகள் போன்றவற்றின் நிலையும். இதில் சில அமைப்புக்கள் ஒன்றில் ஏதாவது ஒரு கட்சியோடு நிற்கின்றன. அல்லது அரசாங்கத்தைப் பகைக்க அஞ்சுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலின் போது, பொது வேட்பாளருக்கு ஆதரவாகக் காணப்பட்ட மக்கள் அமைப்புகள்கூட பகிரங்கமாக அறிக்கை விடத் தயங்கின. ஏனென்றால் புதிய அரசாங்கத்தை, புதிய ஜனாதிபதியைப் பகைப்பதனால் தமக்கு எதிர்காலத்தில் வரக்கூடிய நெருக்கடிகளைப் பற்றிய பயம் அந்த அமைப்புகளிடம் இருந்தது.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் பொருத்தமான வினைத்திறன் மிக்க வலையமைப்பும் கிடையாது. கட்டமைப்புகளும் கிடையாது. ஆனால் நான் எனது கட்டுரைகளில் அடிக்கடி கூறுவதுபோல கொடுமையான யதார்த்தம் என்னவென்றால், தமிழ்க் கிராமங்களில் அரச புலனாய்வுத்துறைக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளை விடவும் ஆழமான பரவலான வலையமைப்பு உண்டு என்பதுதான்.

இப்படிப்பட்டதோர் பாரதூரமான வெற்றிடத்தில், இப்பொழுது அரச பலத்துடன், தேர்தலில் கிடைத்த வெற்றிகள் தந்த உற்சாகத்தோடு, தேசிய மக்கள் சக்தியானது தமிழ் பகுதிகளில் தனது வலையமைப்பைப் பலப்படுத்தி வருகின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களில், யாழ்பாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மூவரும் தமிழ் மக்களுக்கு அதிகம் தெரிய வந்தவர்கள் அல்ல. அவர்கள் தமிழ் மக்களுடைய போராட்டக் களங்களிலும் காணப்பட்டதில்லை ஜேவிபியின் தென்னிலங்கை மையப் போராட்டங்களிலும் துருத்திக் கொண்டு தெரிந்ததில்லை. ஆனால் தேர்தலில் வென்றார்கள். எப்படி?

தமிழ்ப் பகுதிகளில் தனது வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொழுது ஜேவிபி தன்னுடைய செயற்பாட்டு ஒழுக்கத்துக்குடாகவோ அல்லது கொள்கை விளக்கத்துக்கு ஊடாகவோ அவர்களைத் தெரிவு செய்யவில்லை என்பதைத்தான் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் நிரூபித்தது. திருகோண மலையில் இருந்து தெரிவு செய்யப்பட்டவரும் துணை வெளி விவகார அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திர ஒருவர்தான் ஒப்பீட்டளவில் ஜேவிபி பாரம்பரியத்தில் வந்தவர். யாழ்ப்பாணத்தில், வன்னியில் நிலைமை பெருமளவுக்கு அவ்வாறில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில், தனது வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொழுது என்பிபி ஏனைய தென்னிலங்கை மையக் கட்சிகளைப் போலவே செயல்பட்டது. ஆனால் அதே தவறை அவர்கள் அடுத்தடுத்த தேர்தல்களில் விடுவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது.

அரசாங்கம் அனேகமாக சில மாதங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக்கூடும். மாகாண சபைத் தேர்தலையும் நடத்த வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உண்டு. ஏனென்றால் இந்தியாவைத் திருப்திப்படுத்த வேண்டும். எனவே அடுத்த ஆண்டில் இரண்டு தேர்தல்களை எதிர்பார்க்கலாம். காசு ஒரு பிரச்சினையாக இல்லையென்றால், தேர்தல் நடக்கும்.

தேர்தல்களில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் கடந்த ஆண்டு நடந்து கொண்டதைப்போல தங்களுக்குள் ஐக்கியப்படாமல், சிதறி நின்று வாக்குக் கேட்டால் என்ன நடக்கும்? அதன் விளைவாக அதிகளவு சுயேச்சைகள் களமிறக்கப்பட்டால் என்ன நடக்கும்? கடந்த ஆண்டு, நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குக் கசப்பான ஒரு தண்டனையை வழங்கினார்கள். அந்தத் தண்டனையிலிருந்து அவர்கள் கற்றுக் கொண்டால் இந்த ஆண்டிலாவது தேர்தல் முடிவுகளில் மாற்றம் ஏற்படலாம்.



கனடிய செய்திகள் Canadian News

# இவ்வருடத்து "வர்த்தக தீபம்" விழாவில் பல்வேறு துறைகள் சார்ந்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கிய கனடா – இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம்














கனடாவில் கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவரும், இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் தமது இவ்வருடத்து “வர்த்தக தீபம்” பெருவிழாவில் பல்வேறு துறைகள் சார்ந்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்ததுடன் கனடா ஸ்காபுறோ நகரில் நிறுவப்படவுள்ள “ஸ்காபுறோ தமிழர் சமூக மையத்திற்கு 10 ஆயிரம் டாலர்களையும் யாழ்ப்பாணம் நல்லூரில் இயங்கும் - இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கள் அவர்கள் தலைமையில் இயங்கும் “இளங்கலைஞர் மன்றத்தின் கட்டட திருத்த வேலைகளுக்கு இலங்கைப் பணமாக 5 இலட்சம் ரூபாய்களையும் வழங்கியதன் மூலம் தாங்கள் சமூகத்தின் மீதும் அக்கறை கொண்டவர்களே என்பதையும் பறை சாற்றியுள்ளனர்.

மேற்படி விழாவின் பிரதம விருந்தினராக சட்டத்தரணி தம்பையா ஸ்ரீபதி அவர்களும் சிறப்பு விருந்தினராக இலங்கை வாழ் எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான தம்பிஜயா தேவதாஸ் அவர்களும் விசேட விருந்தினராக “இன்னிசை வேந்தர்“ பொன் சுந்தரலிங்கம் அவர்களும் கலந்து கொண்டமை விழாவின் தரத்தை மேலும் உயர்த்தியது என்றால் அதுவும் மிகையாகாது.

மேற்படி விழாவை சிறப்பாக நடத்த இவ்வருடமும் முன்னாள் தலைவர்களான திரு. கிருஸ்ணகோபால் செல்லத்துரை, திரு. கேதா நடராஜா. தற்போதைய செயலாளர் சோதி செல்லத்துரை மற்றும் திருவாளர்கள் அருண் குலசிங்கம் - அரியராசா - ஜெயவீரசிங்கம் - நடா உதயன் - கருணா உட்பட பலர் இவ்வருட


















விழாவின் வெற்றிக்கு உழைத்த பெருமக்கள் என்பதையும் அங்கு காணக்கூடக்கூடியதாக இருந்தது.

இவ்வருட “வர்த்தக தீபம்“ விழாவில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம், சங்கத்தினரால் “பல்லினங்களுக்கும் ஊடகப் பணியாற்றும் சிறந்த பத்திரிகை ஆசிரியர்“ என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்.

அத்துடன் மொன்றியால் வர்த்தகப் பெருமகன் (ஏஎம்ஆர்) முத்தையா இராஜகோபால் - மற்றும் சமூகப் பணியில் முன்னின்று உழைத்து வரும் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை ஆகியோருக்கும் முறையே வர்த்தக விருதும் சமூக சேவை விருதும் வழங்கப்பெற்றன.

மேலும் “ஈழநாடு“ பரமேஸ்வரன் - கலாநிதி சுப்பிரமணியன் நித்தியானந்தன் - திரு. வசந் வேலும்மயிலும் - திருமதி. தீபா வசந்த் - கலாநிதி பார்வதி கந்தசாமி - ஒலிபரப்பாளர் எம்.பி. கோணேஸ் - திருமதி. பிரியா புவிராஜ் - சமூக சேவையாளர் சபா வரதராஜா - மற்றும் சமூக சேவையாளர் எஸ். மதியழகன் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பெற்றன.

விழாவின் அனைத்து நிகழ்ச்சிகளை அறிவிப்பாளர் ஜஸ்ரின் போல் தொகுத்து வழங்கினார்.

கலைநிகழ்ச்சிகளும் “மெகா ரியுனர்ஸ் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி ஆகியனவும் விழாவிற்கு மெருகூட்டின.

இவ்வாறான நற்பணிகளை ஆற்றும் கனடா-இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் இயக்குனர் சபையினருக்கும் பொதுச் சபையினருக்கும் கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

கனடா - இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் தற்போதைய தலைவர் சோம சச்சிதானந்தன் அவர்கள் தலைமையில் இயங்கிய முன்னாள் தலைவர்கள் மற்றும் முன்னாள் செயலாளர்கள் முன்னாள் இயக்குனர் சபை உறுப்பினர்கள் அனைவரதும் கடின உழைப்பின் காரணமாகவே, கடந்த 29-12-2024 அன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோ கொன்வென்சன் மண்டபத்தில் நடைபெற்ற “வர்த்தக தீபம்“ விழா ஒரு சமூகத்திற்கான விழாவாக வெற்றிகரமாக நடைபெற்றது என்றால் அது மிகையாகாது.

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24








Toronto சிட்டி கவுன்சிலர்

## PAUL AINSLIE

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

## HELP IS AVAILABLE

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி | Ontario Works |
| விலங்கு சேவைகள் | வாகனத் தரிப்பிடங்கள் |
| உயர்மாடி கட்டட சட்டங்கள் | பூங்காக்கள் |
| கட்டட அனுமதி பத்திரங்கள் | காவல் துறை |
| பிள்ளை பராமரிப்பு சலுகை | பொதுச் சுகாதாரம் |
| அவசர வீட்டு வசதிகள் | வீதிகள் |
| தீயணைப்பு சேவைகள் | ஆதன வரிகள் |
| கழிவுப் பொருட்கள் சேவை | பொதுப் போக்குவரத்து |
| நூலகச் சேவை | மீள் சுலட்சியும் பசுமை திட்டமும் |
| மாநகரத் தேர்தல் | மரங்கள் |
| மாநகர அனுமதியும் சட்டங்களும் | நீர் விநியோகம் |

**நியமன அலுவலகம்**
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

**ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்**
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)

**www.paulainslie.com 416-396-7222**



## VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**

2025 **KICKS PLAY S**

LEASE FROM $298 MONTHLY WITH $1,299 DOWN.
THAT'S LIKE PAYING
**$69** WEEKLY AT **4.99%** APR FOR 39 MONTHS O.A.C.
PLUS, QUALIFYING NISSAN OWNERS MAY RECEIVE UP TO
**$500** IN LOYALTY BONUS
OFFER ENDS JANUARY 2ND, 2025.

NISSAN



**WINTER READY** EVENT



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT

905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN

25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குரு மன்றத்தில்
புதுவருட சிறப்புப்பூசை



ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்தூர்
ஆதிபராசக்தி குருமன்றத்தில்
01-01-2025 புதன்கிழமை காலை 8:30 தொடக்கம்
சிறப்பாக பூசை நடைபெறவுள்ளது.

6-1-2025 திங்கட்கிழமை காலை
அமாவாசைபூசையும் சிறப்பாக நடைபெறும்.
அனைத்து சக்திகளையும் அன்னையின்
அருளைப்பெறும்வண்ணம் அன்புடன்
அழைக்கின்றனர். மகேஸ்வரபூசையும் நடைபெறும்.
பூசைப்பொருட்கள் வேப்பிலை, பழவகை,
பூ போன்றவை கொடுத்துதவலாம்.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647





Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# இலங்கை தேசிய அருங்கலைகள் பணியகத்தின் தங்க விருதினைத் தட்டிக் கொண்ட யாழ்ப்பாண மண்ணின் அருங்கலை வித்தகன் பத்மநாதன் சியாம்கிருஸ்ணா







அண்மையில் இலங்கைத் தீவெங்கிலும் உள்ள அருங்கலை விற்பன்னர்களை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்பெறும் போட்டியில் இலங்கை தேசிய அருங்கலைகள் பணியகத்தின் தங்க விருதினைத் தட்டிக் கொண்ட யாழ்ப்பாண மண்ணின் அருங்கலை வித்தகன் பத்மநாதன் சியாம்கிருஸ்ணா அவர்களை யாழ்ப்பாணம் வாழ் மக்கள் மாத்திரமல்ல, உலகெங்கும் வாழும் மக்கள் பலரும் பாராட்டி மகிழ்கின்றார்கள்.

மேற்படி வெற்றியாளர் பத்மநாதன் சியாம்கிருஸ்ணா அவர்கள் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் வாழ்ந்து வருகின்றார். அவரது தந்தையார் பத்மநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் சிறந்த வயலின் கலைஞராக விளங்கியவர்.

தந்தையார் வழியில் கற்று வயலின் வித்துவானாகத் திகழ்ந்த பத்மநாதன் சியாம்கிருஸ்ணா அவர்கள், நாளடைவில் வயலின் கருவிகளை யாழ்ப்பாணத்தில் தனது கைகளாலும் தனது அனுபவத்தாலும் செய்யும் வித்துவத்தைக் கற்றுக்கொண்டார்.

2021ம் ஆண்டு தான் கற்ற அருங்கலைகள் தொடர்பான அனுபவத்தால் சில கருவிகளைத் தயாரித்து யாழ்ப்பாண மாவட்டத்தில் விருதுகளைத் தட்டிக் கொண்டார்.

பின்னர், 2024ம் ஆண்டு இலங்கை அருங்கலைகள் பணியகம் தேசிய ரீதியில் நடத்திய அருங்கலை தயாரிப்புக்கள் போட்டியில் தனது புதிய தயாரிப்பான இரட்டை வயலின் கருவியொன்றை மிகவும் நுட்பமாகத் தயாரித்து தேசிய ரீதியில் நடத்தப்பெற்ற போட்டிக்கு அனுப்பி அதற்காக தங்க விருதைத் தட்டிக்கொண்டார்.



வடமாகாண கைத்தொழில் திணைக்களத்தின் அதிகாரிகள் தந்த உற்சாகமும் ஊக்குவிப்புமே, தன்னை இவ்வாறான அதி உயர் விருதினைத் தட்டிக் கொள்ளும் வாய்ப்பைத் தந்தது என்று கூறிக்கொள்ளும் வெற்றியாளர் பத்மநாதன் சியாம்கிருஸ்ணா அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியொன்றில் "வட மாகாணத்தில் உள்ள அருங்கலைகளில் நாட்டம் கொண்ட அன்பர்கள் புதிய தயாரிப்புக்களை தயாரித்து தேசிய ரீதியில் நடத்தப்பெறும் போட்டிகளில் விருதுகளைத் தட்டிக் கொண்டு தாம் பிறந்த யாழ்ப்பாண மாவட்டத்தின் பெருமையை நிலைநாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இங்கு காணப்படும் படங்களில் கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் அவர் தனது குடும்பத்தினரோடு கலந்து கொண்டவையும் காணப்படுகின்றன.





# அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவில் ஊடகவியலாளர் மீது தாக்குதல்– ஆறு சந்தேக நபர்கள் கைது

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பான செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளரை தாக்கிய 6 சந்தேக நபர்களை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.







அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நைனாகாடு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பான செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளரை தாக்கி ஊடக உபகரணங்கள் பறிக்கப்பட்ட சம்பவம் 2ம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

விவசாயிகளிடமிருந்து கிடைத்த தகவலை அடுத்து சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறும் பகுதிக்கு செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர் அச்சல உபேந்திர(வயது-50) மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது டன் தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளரின் புகைப்பட கருவி தொலைபேசி ட்ரோன் கேமரா ஆகியவை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்களால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினர் செயற்பட்டு ஊடகவியலாளர் வசம் இருந்து சந்தேக நபர்களினால் அபகரித்து செல்லப்பட்ட ட்ரோன் கேமரா புகைப்பட கருவி மற்றும் தொலைபேசிகள் மீட்கப்பட்டன.


அத்துடன் ஆறு சந்தேக நபர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் மணல் அகழ்வில் ஈடுபட்ட வாகனம் என்பன மீட்கப்பட்டுள்ளன.இது தவிர தாக்குதலுக்குள்ளான குறித்த ஊடகவியலாளர் அம்பாறை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழ்ப்பாணத்தில் ஆபத்தான சாரத்தியம் – கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் பணிப்பு!

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வழித்தடத்தில் 28.12.2024, அன்று தனியார் பேருந்து ஒன்று சாரத்திய நடைமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்தமை தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவலாக காணொளிகள் பகிரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இவ்வாறான சாரத்தியத்துக்கு கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு, வடக்கு மாகாண தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தவிசாளர் க.மகேஸ்வரனை வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார். அதற்கு அமைவாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




# தமிழரசுக் கட்சிக்கு "இறுதிக் கிரியை"

***"முக்கிய பதவிகளுக்கு "தலையாட்டி"களை நியமித்தும் பேச்சாளர் பதவியை மீண்டும் கைப்பற்றியும் கட்சியின் விசுவாசிகளை வெளியேற்றியும் இடைக்காலத் தடைகளை விதித்தும் சர்வாதிகாரத்தனமாக தமிழரசுக்கட்சியை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து சேடமிழுத்துக் கிடக்கும் தமிழரசுக் கட்சியின் இறுதிக் கிரியைக்கான ஏற்பாடுகளை "சுமந்திரன் அணி" தடபுடலாக செய்து முடித்துள்ளது."***

**------------------------------------------------------------ - கே. பாலா ----**

தமிழ் தேசிய இனத்தின் தாய் கட்சி எனக்கூறப்படும் இலங்கை தமிழரசுக்கட்சி இலங்கை அரசியலில் தனது 75 ஆவது ஆண்டு பவளவிழாவை ஒருபுறம் கொண்டாடும் நிலையில் மறுபுறம் அதன் ஆயுளுக்கு முடிவுகட்டும் தீவிரமுயற்சியில் ஈடுபட்டுள்ள சுமந்திரன் அணி அந்த முயற்சியில் வெற்றியும் பெற்று வருவதனை அண்மையில் நடந்து முடிந்த தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் அவதானிக்க முடிந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக உள்ள மாவை சேனாதிராஜாவின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்று தீர்மானிப்பதற்காக, கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இக்கூடத்திலேயே தமிழரசுக்கட்சியின் இறுதிக்கிரியைக்காண ஏற்பாடுகளை சுமந்திரன் அணி தடபுடலாக செய்து முடித்துள்ளது.

இதற்கு முன்னரான மத்தியகுழுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைமை தொடர்பாக விவாதங்கள் இடம்பெற்று குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது. அந்தவகையில், கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவின் பதவி விலகல் கடிதத்தை ஏற்பதா அல்லது அவரே தொடர்ந்து தலைவராக செயற்படுவதற்கு அனுமதிப்பதா என்பது தொடர்பாக வாக்கெடுப்பிற்கு விடுவதற்கு கடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன்பின்னர், தலைவரை நீக்கும் அதிகாரம் மத்திய குழுவிற்கு இல்லை எனத் தெரிவித்து வழக்கு தாக்கல் ஒன்றும் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நான் விலகவில்லை. அதன் பிரகாரம் கட்சியின் தலைமைப் பதவியில் நானே தலைவராகத் தொடர்கின்றேன். ஆகவே தலைமைப் பதவிதொடர்பில் வாக்கெடுப்பொன்றை நடத்தவேண்டிய அவசியமில்லை என்று மாவை சேனாதிராஜா கட்சியின் பதில் பொ துச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கத்துக்கு கடிதம் மூலம் அறிவித்தார்.

மேலும், ஒக்டோபர் 7ஆம் திகதி என்னால் சிறிதரன் மற்றும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதமானது பதவி விலகும் அறிவிப்பை உள்ளடக்கியது அல்ல. நான் கட்சியின் தலைமைப் பொறுப்பினை சிவஞானம் சிறிதரனை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறே கேட்டுக்கொண்டிருக்கின்றேன். குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்ட இரண்டு மாதங்களாகின்றபோதும் சிறிதரன் தலைமைப் பதவியை பொறுப்பேற்காமையின் காரணமாக நானே தலைமைப்பதவியில் நீடிக்கின்றேன். அந்த வகையில், 28ஆம் திகதி நடை பெறவுள்ள மத்திய செயற்குழு கூட்டத்தில் வாக்கெடுப்பை நடத்த முடியாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் எனவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

மாவையின் இக்கடிதம் தொடர்பில் கருத்துரைத்த கட்சியின் முன்னாள் எம்.பி.யும் மாவை சேனாதிராஜாவை தலைவர் பதவியிலிருந்து அகற்ற உள் வீட்டுக் கலகம் செய்பவருமான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராஜா பதவி விலகியிருக்கின்றார். அதனைக் கட்சியின் செயலாளர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால் அதன் பின்னர் பதவி விலகலை திரும்பப் பெறுவதாகக் குறிப்பிட்டு மாவை சேனாதிராஜா முற்திகதியிடப்பட்ட கடிதமொன்றை அனுப்பி வைத்திருக்கின்றார். பதவி விலகல் செய்தால் அதில் மாற்றம் இருக்கமுடியாது. பதவி விலகி இரண்டு மாதங்களின் பின்னர் அதனை திரும்பப் பெறுவதாகக் குறிப்பிட்டு முற்திகதியிடப்பட்ட கடிதத்தை அனுப்பிவைப்பதனால் எந்தப் பயனுமில்லை. தமிழரசுக்கட்சியின் தலைமைப் பதவியில் மாவை சேனாதிராஜா நீடிப்பதை அங்கீகரிப்பதா? இல்லையா? என்பது பற்றித் தீர்மானிக்கப்படவுள்ளது. இதன் பொருட்டு டிசம்பர் 28ஆம் திகதி வவுனியாவில் கூடவுள்ள கட்சியின் மத்திய செயற்குழுவில் வாக்கெடுப்பு நடத்துவதற்கு கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற மத்திய குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது எனக் கூறியிருந்தார்.

இவ்வாறான நிலையில் தான் கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவை சேனாதிராஜா கலந்துகொள்ளாத நிலையில் சுமந்திரன் அணி தமது இஷ்டத்துக்கு தீர்மானங்களை எடுத்து தமது அடிவருடிகளையும் விசுவாசிகளையும், தலையாட்டிகளையும் பதவிகளுக்கு நியமித்துள்ளதுடன் கட்சியின் விசுவாசிகளை, தமிழ் தேசிய உணர்வாளர்களை தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேற்றியும் இடைநிறுத்தியும் தமிழரசுக்கட்சியின் சவப்பெட்டிக்கு இறுதி ஆணி அடித்துள்ளது. இதேவேளை இந்தக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சி மீது கட்சியினரே போட்ட வழக்குகளை வாபஸ் பெறுவதாக சுமந்திரன் கூறியுள்ளார். இதிலிருந்தே குறித்த வழக்குகளின் பின்னணியில் தானே இருப்பதை சுமந்திரனே ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்தக்கூட்டத்தில் சுமந்திரன் அணியின் கைகளே ஓங்கியிருந்ததால் கடந்த தேர்தலில் தமிழரசுக் கட்சியில் இருந்து விலகி வேறு கட்சிகள் அல்லது சுயேட்சைக்குழுக்கள் ஊடாக தேர்தலில் போட்டியிட்டவர்கள் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டனர். இதற்கமைய கட்சியின் முக்கியஸ்தர்களான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, முன்னாள் எம்.பி.சரவணபவன், உள்ளிட்ட இன்னும் சிலர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். அதேவேளை கட்சியின் மத்திய குழு உறுப்பினரான வைத்தியர் சிவமோகன் மீது தேர்தல் காலங்களில் கட்சியினுடைய வேட்பாளர்களை நேரடியாக தாக்கி ஊடக சந்திப்புக்களை நடத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அவரும் கட்சியிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டதுடன் அவரிடம் விளக்கம் கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதுமட்டுமன்றி நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள், தமிழ் தேசியக்கட்சிகளின் வேண்டுகோளை ஏற்று பொது வேட்பாளராக போட்டியிட்ட தமிழரசுக்கட்சியின் மத்திய குழு உறுப்பினரான அரியநேத்திரன் ஏற்கனவே இடை நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில் அவரையும் கட்சியிலிருந்து விலக்கலாம் என்ற பிரேரணையும் முன்வைக்கப்பட்டது. மேலும் வேறுகட்சிகள் மற்றும் குழுக்களுக்காக பிரசாரம் செய்தவர்கள் மற்றும் கட்சியின் முடிவுகளுக்கு மாறாக ஜனாதிபதி தேர்தலில் பிரசாரம் செய்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதெனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை வேறுகட்சிகள் மற்றும் குழுக்களுக்காக பிரசாரம் செய்தவர்கள் மற்றும் கட்சியின் முடிவுகளுக்கு மாறாக ஜனாதிபதி தேர்தலில் பிரசாரம் செய்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதெனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டதால் விரைவில் சிறீதரன். சிறிநேசன் ஆகிய எம்.பி.க்களுக்கு ஆப்பு செருகப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. இதன்மூலம் இவர்களில் ஒருவரின் எம்.பி.பதவி பறிக்கப்பட்டு தோற்றவர் மீண்டும் எம்.பி.யாகவும் திட்டங்கள் உள்ளதாகவும் உள் "வீட்டு" தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இந்த மத்திய குழுக் கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு தலைவராக மாவை சேனாதிராஜா நியமிக்கப்பட்டதுடன் கட்சியின் அடுத்த கூட்டம் வரையில் பதில் தலைவராக சி.வி.கே. சிவஞானம் நியமிக்கப்பட்டார். அத்துடன் ஏற்கனவே கட்சியின் பாராளுமன்றக் குழுவின் பேச்சாளராகவும் கட்சியின் பேச்சாளராகவும் சிறிநேசன் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தமிழரசுக்கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளராக மீண்டும் சுமந்திரன் நியமிக்கப்பட்டார்.

இவ்வளவு தீர்மானங்களும் சர்வாதிகாரத்தனமாக எடுக்கப்பட்டிருந்தாலும் கட்சியின் பேச்சாளராக நியமிக்கப்பட்ட சுமந்திரனால் இத்தீர்மானங்கள் ஏகமனதாக எடுக்கப்பட்டதாகவே ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஏனெனில் கட்சியின் மத்தியகுழுவிலுள்ள 46 பேரில் அரியநேத்திரனுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாலும் தவராசா, சரவணபவன் ஆகியோர் கட்சியிலிருந்து வெளியேறியுள்ளதாலும் மிகுதியாகவுள்ள 43 பேரில் 20பேர்வரையில் மாவை சேனாதிராஜா தலைவர் பதவியில் நீடிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்துள்ளனர் 16 பேர்வரையிலேயே அதற்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்துள்ளதுடன் ஏனையவர்கள் இருபக்கமும் சாராது இருந்துள்ளனர் எனவே இங்கு ஏகமனதான தீர்மானம் எடுக்க முடிந்திருக்காது என்பது வெளிப்படை.

அகவே தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தமது இலக்குகளை அடைவதற்காக ,தமது இலக்குகளுக்கு தடையாகவுள்ளவர்களை அகற்றுவதற்காக, தமிழ்தேசியத்திற்கான குரலை நசுக்குவதற்காக, தமது மேதாவித்தனத்திற்கு கட்டுப்படாதவர்களை அடக்குவதற்காக, அச்சுறுத்துவதற்காக ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்ற பெயரில் சுமந்திரன் அணி முன்னெடுத்த இந்த "பயிர் எடுப்பு"க்களினால் தமிழரசுக்கட்சியில் "களை"களே இன்னும் அதிகம் வளரப்போகின்றன. அந்தக் "களை"கள் தமிழரசுக்கட்சியின் வாக்கு விளைச்சலை அழிக்கப் போகின்றன.

நடந்து முடிந்த பாராளுமன்றத்தேர்தலில் சுமந்திரன் அணி தமக்கு வேண்டியவர்களை வேட்பாளர்களாக நிறுத்தியமை தமிழரசுக்கட்சி வடக்கில் படுதோல்வியடைய முக்கிய காரணங்களில் ஒன்றாக இருந்தது. தற்போது அதே சுமந்திரன் அணியே தமக்கு வேண்டியவர்களை தமிழரசுக்கட்சியின் முக்கிய பதவிகளுக்கு நியமித்துள்ளமை தமிழரசுக்கட்சியின் முடிவு காலமாகவே அமையப் போகின்றது. சிறிதரன் தலைமைப்பதவிக்கு வந்து விடக்கூடாதென்பதில் சுமந்திரன் அணி சிலந்திவலை அமைப்பதால் தமிழரசுக்கட்சி விரைவில் தமிழ் மக்களிடமிருந்து பிரிந்து செல்லும், தமிழ் தேசிய அரசியலிலிருந்து காணாமல்போகும் நிலையே பிரகாசமானதாகவுள்ளது.

# Anti-Muslim Riots Probe Report by HRCSL Not Released as Promised

**- Siva Parameswaran**

The scars of the Digana anti-Muslim riots will take a long time to heal or may not even heal for generations going by the unwillingness of the state and its statutory bodies.

It is almost 7 years since the perpetuated riots by 'racist' Sinhalese people on the socially-economically impoverished Muslim people in the small town of Digana in Kandy district, in which few were butchered and burnt to death and many so brutally attacked they are handicapped for life.

However, even after such a brutal riot the 'investigation report' by the Human Rights Commission of Sri Lanka (HRCSL) is yet to be published as promised.

The commission had earlier promised its report on the 'Digana riots' would be published in December 2024 for the year to pass by.

Now local journalist MIM Musadique has written to the Commission urging it to make its findings at least under this government.

More than 8 Decembers have passed since the riots took place in Digana in March 2018, which saw properties worth millions being ransacked, burnt, and destroyed apart from the loss of lives.

The planned violence was perpetuated against the upcountry Muslims allegedly with the support of the police and state agencies.

A recent documentary by senior journalist Shanmuganathan Parthiban brought out hitherto unknown facts and the state of shock under which the affected families and communities still continue to live amidst fear, with justice not being rendered.

The documentary was released in July 2024 with what could be considered solid proof that the security agencies had a hand in the riots.

The HRCSL was forced to investigate the riots after much delay. But the report is yet to be released with serious questions being raised by those affected and the public about their intention and inability.

After the documentary was released, the HRCSL assured its report along with recommendations will be made public before the end of 2024. This however was not to be despite one of its commissioners Dr. Gehan Dinuk Gunatilleke telling the media their investigative report will be out by the end of the year.

With no signs of the report being released as promised before the end of 2024, Kandy-based journalist MIM Musadique wrote a letter on behalf of the affected Muslims to the HRCSL on the 30th of December, pointing out that the commission has failed them once again.

His letter says the report has not been published. This is despite them having written so many letters, reminding them of their commitment and deadline, since the riots occurred.

In his letter, apart from the disappointment of the report not being released for nearly 7 years now, he has appealed to the HRCSL to make the report public at least under the new government.

"Apart from this incident being spoken in the Parliament for the last 6 years, I humbly request the new government which has come to power to release the report quickly".


The affected Muslims have started demanding an international investigation into the riots saying they have lost confidence in the country's judicial mechanism.

The 'Digana Riot' has gone down in Sri Lankan history as one of the most significant attacks on minority communities.

Even today many Muslims who have lost their income and livelihood due to the planned riot are struggling to get back to normal life. They were, however, able to partially rebuild their businesses with support from various organizations.

The affected people to date allege that the government at the time did not provide them the paltry compensation promised.

Eyewitnesses say at least six mosques, 37 houses of Muslims, 46 commercial establishments, and 35 vehicles were reportedly damaged in the attack carried out between March 4-7, 2018 in Kandy, Digana, and Teldeniya areas.




# Grieving Tamil Mother Grilled by Sri Lanka's "Terror Police" About LTTE Resurrection

**- Siva Parameswaran**

AA war-affected grieving mother from the Eastern Province, who was among those in the forefront seeking to find those who have gone missing or victims of enforced disappearances, was summoned by the police alleging she tried to reinvigorate the now military defeated Tamil Tigers.

Tambirasa Selvarani from Amparai district, who heads the Association for the Relatives of the Enforced Disappearances (ARED) in that district is among those elderly mothers who are searching for their children even after the brutal civil war came to a bloody end in May 2009, who are searching for their beloved one who either made to forcefully disappear or handed over by the family members to the state security forces.

She was summoned by the Thirukovil police for an inquiry to record her statement by the Counter Terrorism Investigation Department (CTID) - dubbed the 'Terror Police'- on the 8th of October to be present at the Women and Child division of the police station.

The Officer in charge says she was summoned to the police station based on a complaint made by the Navy and the Army to the CTID Headquarters.

As part of the investigations, Ms. Selvarani says she was asked for details about her past and present.

"Apart from a file containing my personal details that were handed over to the OIC by the police department, a set of questions from the CTID were also given to them to be asked from me. Everything seems preplanned".

She was also asked about her association with the LTTE, by the officer who inquired her.

"How many years were you with the LTTE? During that period how many military persons you killed?" she told local journalists after the inquiry.

Adding further Tambirasa Selvarani told the local journalists, that the inquiring officer asked here citing reports that efforts are on to reinvigorate the LTTE in India and France even after the Sri Lankan government announced they were annihilated fifteen years back.

"Are you heading such action in Sri Lanka?"

However, the police officials did not produce any proof of their said to be reports of recreating the LTTE again, but kept asking her about the issue.

"I am 53 years old now. Coming 12th December I will be 54. I don't even have the physical strength to look after my own needs. In such a case how or where am I going to do such things? It was only you who said they have been defeated, annihilated etc?".

Even while she replied as such, Selvarani was asked repeatedly, "Did you not do so?"

"There is nothing like that. I am not doing anything like that Sir, nothing like that" she said in her reply to the OIC. She told the local journalists asking such unfounded questions about her past is creating mental trauma in her.

The unrelenting police officer was trying to destabilize me mentally and kept on asking the same question in different forms, she adds.

"Is it not those said to be victims of enforced disappearances and being searched for are former LTTE carders?

"They are different. Those martyred are gods now. We are searching for the children whom we handed over to the security forces, or those who surrendered to them" she replied back.

She says the police officer in an intimidating manner asked her their motive for searching for those who disappeared, to which Tambirasa Selvarani retorted by saying they were just demonstrating to seeking to know the fate of their beloved ones.

When the police officer questioned again if the protest was for the welfare of all the Sinhala, Tamil, and Muslims, The Amparai district President of the ARED shot back saying "Our aim is to find the fate of all those and bring out the truth".

"Yes, whoever it is. All are human beings. We should know what happened to all of them".

Not satisfied with her answer the police officer questioned her about their motive saying if those disappeared were found out, then the truth about who made them disappear would be known, and "you want them to be punished?"

Selvarani told the OIC, that the perpetrators should not be killed, they should be punished by due process of law.

"Yes, that has to happen for sure. They should be punished, not killed, they should know how and what prison life is and endure that".

ARED Amparai President, Tambirasa Selvarani told local journalists the police officers showed here pictures from the file folder about her, which had photos of events and demonstrations where she participated both locally and abroad including her participation in the 57th session of the UN Human Rights Council meeting in Geneva.

The Association for the Relatives of the Enforced Disappearances in the North and East Provinces, is a civil society group created to search for the tens of thousands of people who disappeared during Sri Lanka's armed conflict.



# "தமிழ் இலக்கியத்தில் உள்ள "வீர வணக்கம்" என்ற சொல்லை பேஸ்புக் தளத்தில் பதிவிட்டமை குறித்து பயங்கரவாதத் தடுப்பு புலனாய்வுப் பிரிவு என்னிடம் கேள்வி"

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## அரசியல் செயற்பாட்டாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன்

தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் மரபார்ந்த சொல்லை சமூக ஊடகங்களில் பயன்படுத்துவதை பயங்கரவாதச் செயலாகக் கருதுவது இலங்கையின் கல்விக் கொள்கைக்கு முரணானது என விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வடக்கு அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரிடம் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் 28ஆம் திகதி காலை பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் கிளிநொச்சி பிரிவுக்கு அழைக்கப்பட்ட கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அருணாச்சலம் வேழமாலிகிதனிடம் பொலிஸார் சுமார் இரண்டு மணிநேரம் அவரது சமூக ஊடக பயன்பாடு குறித்து விசாரணை நடத்தியுள்ளனர்.

தமிழ் இலக்கியத்தில் காணப்படும் "வீர வணக்கம்" என்ற சொல்லை பேஸ்புக் தளத்தில் பின்னூட்டமாக (comment) பதிவிட்டமை குறித்து பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு தன்னிடம் கேள்வி எழுப்பியதாக அருணாச்சலம் வேழமாலிகிதன் கூறுகிறார்.

பாடசாலை பாடப்புத்தகங்களில் கூட இடம்பெற்றுள்ள இதுபோன்ற விடயத்தை கேள்வி கேட்பது இலங்கையின் கல்விக் கொள்கைக்கு எதிரானது என தமிழ் ஆர்வலர் பொலிஸ் அதிகாரியிடம் கூறியுள்ளார்.

"வீர வணக்கம் என்ற சொல்லைக் காட்டி கேட்டார்கள். வீர வணக்கம் எனப்படுவது தமிழர்களின் மரபார்ந்த சொல். இது விடுதலைப் புலிகளின் சொல்லோ அல்லது அவர்கள் உருவாக்கிய சொல்லோ அல்லது தடை செய்யப்பட்ட சொல்லோ அல்ல. பழைய தமிழ் இலக்கியங்களில் உள்ள ஒரு சொல். இது தமிழர் பண்பாட்டுடன் இணைந்த ஒன்று. உயர்தர இலக்கிய பாடப்புத்தகத்தில் இது காணப்படுகிறது என சொன்னேன். அரச பாடப்புத்தகத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது எனக் கூறினேன். ஆகவே இலங்கையின் கல்விக்கொள்கைக்கு எதிராக எங்களை அழைத்து விசாரிக்கின்றீர்கள் என அவருக்கு சொன்னேன்."

"வீர வணக்கம்" என்ற சொல் தமிழ் கலாச்சாரத்தில் மக்களுக்காக சேவையாற்றிய அல்லது போராடி உயிரிழந்த ஒருவருக்கு மரியாதை செலுத்த பயன்படுத்தப்படுகிறது. "விரு உபஹார" என்பது இதன் எளிய சிங்கள அர்த்தம்.

"கமென்ட், லைக் வேண்டாம்"

கடந்த டிசம்பர் 28ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் கிளிநொச்சிப் பிரிவு அதிகாரியினால் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தியமை தொடர்பில் தன்னிடம் மேலும் கேள்வி எழுப்பப்பட்டதாகக் கூறும் அருணாச்சலம் வேழமாலிகிதன், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கும் பொலிஸார் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றார்.

"முகநூல் பதிவுகள், என்னுடைய பதிவுகள் அல்ல மற்றவர்களுடைய பதிவுகள் அதற்கு கொமன்ட் பண்ணியிருக்கின்றேன். லைக் பண்ணி இருக்கின்றேன். மற்றது இனவாதத்தை தூண்டும் வகையில் வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தியுள்ளேனாம். குறிப்பாக எங்களைப் போன்றவர்களின் பதிவுகளைப் பார்த்துதான் இளையவர்கள் இவ்வாறான செயற்படுகின்றனராம். ஆகவே அத்தகைய இனவாத பதிவுகள் அல்லது தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் இலட்சினைகள் மற்றது விடுதலை புலிகள் பற்றிய விடயங்களை இடக்கூடாது." எனக் குறிப்பிட்டனர்.

இவ்வாறு சட்டங்களைப் போட்ட பொலிஸார், அவ்வாறு நான் பதிவிட்ட பதிவுகள் எதனையும் தனக்கு காண்பிக்கவில்லை என அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

வேறு சில நபர்களின் பேஸ்புக் கணக்குகளைக் காட்டி அவர்களைத் தெரியுமா என விசாரணை நடத்திய பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர், அவர்களை எனக்குத் தெரியாது என தான் குறிப்பிட்டதாகவும், அவர்களின் பதிவுகளுக்கு பின்னூட்டம் மற்றும் விருப்பங்களை (like and comment) பதிவு செய்ய வேண்டாம் என பொலிஸார் தனக்கு அறிவுறுத்தியதாகவும் அருணாச்சலம் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

மக்களை தவறாக வழிநடத்தும் பதிவுகளை பதிவிட வேண்டாம் என அறிவுறுத்தும் வகையில் தான் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வு பிரிவின் கிளிநொச்சி பிரிவு அதிகாரிகள் அரசியல் செயற்பாட்டாளரிடம் மேலும் தெரிவித்துள்ளனர்.

"வேறு யாரும் பதிவிட்டால் பரவாயில்லை. அரசியல்வாதிகள் பதிந்தால் மக்கள் அதனை பின்பற்றுவார்களாம். மக்களை தவறான வழியில் திருப்பக்கூடாது என்பதை பற்றி அறிவிக்கவே இந்த விசாரணை நடந்ததாம்."

கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் அலுவலகத்தில் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி கைது செய்யப்பட்ட அருணாசலம் வேழமாலிகிதன், ஒரு வருடத்திற்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்ததன் காரணமாக கடந்த காலங்களில் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரிடம் பல தடவைகள் அருணாச்சலம் வேழமாலிகிதன் வாக்குமூலங்களை வழங்க நேரிட்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# கிளிநொச்சியில் கோர விபத்து – இரண்டு வயது குழந்தையை தொடர்ந்து தாயும் உயிரிழப்பு!

கிளிநொச்சியில் இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப் பெண் 02-01-2025 அன்றையதினம் உயிரிழந்துள்ளார். இதன்போது அன்னை இல்ல வீதி, கனகாம்பிகை குளம் பகுதியைச் சேர்ந்த கஜன் சாளினி (வயது 34) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த நத்தார் தினத்தன்று கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் நால்வர் படுகாயமடைந்தனர். பின்னர் அவர்களை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்தவேளை இரண்டு வயது குழந்தை உயிரிழந்தது.

இந்நிலையில் கணவனும், மனைவியும் ஒரு பிள்ளையும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தனர். மேலதிக சிகிச்சைக்காக மனைவியை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றி அங்கு சிகிச்சை பெற்று வந்தநிலையில் சிகிச்சை பலனின்றி 2ம் திகதி அன்றையதினம் (02) உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். குறித்த விபத்தினை ஏற்படுத்திய டிப்பரின் சாரதி மதுபோதையில் காணப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளி சுமார் 100 மீட்டர் தூரம் வரை இழுத்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

# புலிகள் பாதுகாத்த எமது பெருமளவு நிலங்களை வனஇலாகா அபகரித்துள்ளது

## உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்கிறார் ரவிகரன் எம்.பி




- ந.லோகதயாளன்

கடந்த 2009இற்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளால் பாதுகாக்கப்பட்ட தமிழ் மக்களின் பெருமளவான விவசாய மற்றும், குடியிருப்பு நிலங்களை தற்போது வனவளத் திணைக்களம் அபகரித்துள்ளதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு வனவளத் திணைக்களத்தால் அடாவடித்தனமாக அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில், வவுனியாவடக்கு பிரதேசசெயலகப் பகுதிகளில் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் காணி விடுவிப்புத்தொடர்பில் பேசுபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வன்னிப் பகுதி மக்கள் கடந்த காலங்களில் இடம்பெயர்வைச் சந்தித்து மீள்குடியேறியது அனைவரும் அறிந்ததே. சில இடங்களில் குறிப்பிட்டளவு காலங்களுக்குள்ளும், சில பகுதிகளில் நீண்டகாலங்களுக்குப் பின்னரும் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இந் நிலையில் மக்கள் இடப்பெயர்விற்கு முன்பதாக பயிர்செய்கையில் ஈடுபட்ட காணிகள் தற்போது பற்றைக்காடுகளாகக் காட்சியளிக்கின்றன.

தற்போது இவ்வாறு பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கும் எமது மக்களுக்குரிய காணிகளுக்கு, எவ்வித முன்றிவிப்புக்களுமின்றி வனவளத் திணைக்களத்தினர் தற்போது எல்லைக்கல்லிடுகின்ற அடாவடித்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

அந்தந்த மாவட்டசெயலருக்கோ, பிரதேசசெயலருக்கோ, கிராம அலுவலருக்கோ, காணிகளுக்குரிய மக்களுக்கோ அறிவிக்காமலேயே இவ்வாறு எல்லைக்கல்லிடும்பணிகளில் வனவளத் திணைக்களத்தினர் ஈடுபடுகின்றனர்.

பூர்வீகமாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு திறம்பட வாழ்ந்துவந்த எமது மக்களின் பயிர்ச்செய்கை நிலங்கள் இதில் அதிகமாக வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

வனவளத் திணைக்களத்தின் அடாவடித்தனமான ஆக்கிரமிப்புத் தொடர்பில் ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்டலாமென நினைக்கின்றேன். முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009இற்கு முன்னர் வனவளத் திணைக்களத்திடம் 2,22006 ஏக்கர், 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் அடாவடித்தனமாக எமது மக்களின் காணிகளுக்கும் எல்லைக்கல்லிட்டு 4,35000 ஏக்கர் காணிகள் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது.

அந்தவகையில் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது மக்களின் காணிகளை விடுதலைப் புலிகள் பாதுகாத்தனர். அவ்வாறு எமது மக்களின் காணிகளை விடுதலைப்புலிகள் பாதுகாத்ததால்தான் எமது மக்கள் நிறைவாகவும், சிறப்பாகவும் வாழ்ந்தார்கள்.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட மக்களின் காணிகள் விடுவிக்கப் படவேண்டுமென நாம் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றோம். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கத்திடமும் இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள எமது மக்களின் காணிவிடுவிப்புத் தொடர்பில் தொடர்ந்தும் வலியுறுத்துவோம்.

நாட்டிற்கு காட்டுவளம் தேவைதான். அதற்காக நாட்டுக்கான ஒட்டுமொத்த காடையும் வன்னிக்குள் இருந்து உருவாக்கவேண்டுமென நினைத்தால் அது முற்றிலும் தவறான நிலைப்பாடாகும்.

வன்னியில் மக்களிடம் இருந்த காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும். அவ்வாறு விடுவித்தாலே எமது மக்களால் தமது வாழ்வாதாரத்தைக்கொண்டுசெல்லமுடியும்.

வன்னி மக்கள் சிறந்த உழைப்பாளர்கள். அவர்கள் உழைத்து வாழ்ந்த நிலங்களே இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

எனவே அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும் வனவளத் திணைக்களத்தின் இந்த அடாவடித்தனமான செயற்பாடுதொடர்பில் கவனமெடுக்கவேண்டும். ஜனாதிபதி, பிரதமர், வனவளத் திணைக்களத்தோடு தொடர்புடையவர்களுடனும் நாம் இணைந்து பேசி இந்த பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160


Tasty தமிழா ™
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call:
416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC

# இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டம் ஒழிக்கப்பட்டால் அனுர அரசு பொருளாதார ரீதியில் அச்சப்பட வேண்டியதில்லை

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்



- எஸ்.ஆர்.லெம்பேட் (01-01-2025)

நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டால் அனுர அரசாங்கம் பொருளாதார ரீதியில் அச்சப்பட வேண்டிய அவசியம் ஏற்படாது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 1ம் திகதி அன்று புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புலம்பெயர்ந்துள்ள எம் உறவுகள், எம் நாட்டை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் உள்ளது. எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டால் வேண்டும்.இதனை ஜனாதிபதி கருத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் 13 ஆவது திருத்தச் சட்டம், இந்திய இலங்கை ஒப்பந்தம் இவை அனைத்தையும் நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில், செயற்பாடுகள் அமைய வேண்டும்.

எனவே இந்த புதிய ஆண்டில் எமது கிராம மக்கள் அனைத்து விதமான வசதிகளும் உள்ளது என்று கூறக்கூடிய வகையில் இந்த அரசாங்கம் செயல்பட வேண்டும்.

அதற்காக நாங்களும் ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கிறோம். இந்த வருடத்தில் பின்தங்கிய கிராமங்கள் முழுமையாக வளர்ச்சி பெற வேண்டும். அதற்கான செயற்பாடுகளை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

பிரிந்து செயல்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். நாங்கள் ஒற்றுமையாக செயல் படவில்லை என்றால் நம் மண்ணையும் மக்களையும் உதாசீனம் செய்யும் கட்சிகளாகவே நாம் இருப்போம்.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்றால் தேசியக்கட்சிகள் இல்லாது போகின்ற துர்பாக்கிய நிலை காணப்படும்.

எனவே எதிர் வருகின்ற தேர்தல்களில் நாங்கள் ஒற்றுமையாக செயல்பட வில்லை என்றால் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள அனுரவின் அழை வடக்கு கிழக்கிலும் ஏற்படும்.

இதனால் பாதிப்புகள் எமக்கு ஏற்படுத்தும் என்பது உண்மை.

மக்களின் எதிர்பார்ப்பு தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக செயல் படுங்கள் என்பதே. அந்த ஒற்றுமை இல்லை என்றால் நாங்கள் காணாமல் போய் விடுவோம்.என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# தீவக மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு – வடக்கு ஆளுநர் தெரிவிப்பு!





தீவக மக்களுக்கு பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை விரைவ-ில் நாம் முன்னெடுக்க இருக்கின்றோம். இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செ-யலர் இ.இளங்கோவனுடனும் கலந்துரையாடியிருக்கின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

பிரிட்டன் வாழ் புங்குடுதீவைச் சேர்ந்த நலன்விரும்பிகளால், வட இலங்கை சர்வோதய குடிநீர் வழங்கல் திட்டத்துக்கு வெள்ளிரும்பிலான குடிதண்ணீர் பவுசர் கையளிக்கும் நிகழ்வு 28.12.2024 அன்று சனிக்கிழமை புங்குடுதீவு புஸ்பா மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநரால், பவுசர் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டு உதவ-ிய நலன்விரும்பிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கல்லும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், குடிநீரின் தேவை இன்று தீவகப் பகுதியில் மாத்திரம் அல்ல யாழ்ப்பாண நகரப் பகுதியிலும் உணரப்பட்டுள்ளது. இன்று அங்கு குடிதண்ணீரின் தரம் மற்றும் அளவு தொடர்பில் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

கடல் நீரை நன்னீராக்கி குடிநீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும் வேறு குடிநீர் மூலங்களையும் கண்டறியவேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் எண்ணம் சிந்தனை நல்நோக்குடன் இருந்தமையால் அவர் அன்று ஆரம்பித்த வட இலங்கை சர்வோதய சங்கம் வியாபித்து விருட்சமாக வளர்ந்திருக்கின்றது. நாம் நல்ல எண்ணத்துடன் எதை ஆரம்பித்தாலும் அதை இறை சக்தியாவது வெற்றிகரமாக நடத்தி முடிக்கும்.

இந்த ஊர் மக்கள் புலம்பெயர்ந்து சென்றாலும் தமது சொந்த மண்ணை மறக்கவில்லை. அதனால்தான் அவர்கள் இன்றும் உங்களுக்கு உதவியைச் செய்கின்றார்கள். இவ்வாறு உதவி செய்ய முன்வந்த அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இவ்வாறான உதவிகளை உரிய முறையில் நீங்கள் பயன்படுத்தி பலன்பெறவேண்டும் என ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை, புங்குடுதீவு பிரதேசத்தில் பொலிஸ் காவலரண் தேவை எனவும் ஏதாவது ஒரு வங்கி அமைக்கப்பட வேண்டும் எனவும் அந்தப் பிரதேச மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வட இலங்கை சர்வோதய சங்கத்தின் அறங்காவலர் செல்வி பொன் யமுனாதேவி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேள், வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், தீவகம் தெற்கு பிரதேச செயலர் க.சிவகரன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன், வேலணை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அ.ஜெயக்குமாரன் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புதிய புத்தாண்டே புலர்ந்து நீ வருக !

*மாதாகோவில் மணியோசை கேட்டிட*
*மண்ணில் மாந்தர் மகிழ்ந்து பாடிட*
*காலைக் கதிரவன் கண்விழித்திட*
*காக்கா குருவி களித்துக் கூடிட*
*வெண்பனி பொழிந்து விண்ணை மறைத்திட*
*விண்ணவர் வந்து வாழ்த்துக் கூறிட*
*புதிய புத்தாண்டே புலர்ந்துநீ வருக.*

*தங்கத் தாமரை தன்முகம் காட்டிட*
*தவிக்கும் வண்டுகள் தாவி வந்தாடிட*
*விண்ணில் விண்மீன் வித்தைகள் செய்திட*
*வெண்ணிலா வந்து விபரம் சொல்லிட*
*கத்தும் கருங்கடல் கரையிலே கரைந்திட*
*கருங்குழல் கன்னியர் கடுகியே விரைந்திட*
*புதிய புத்தாண்டே புலரந்துநீ வருக.*

*பஞ்சம் பட்டினி பசி பறந்திட*
*பாரில் பகலவன் பட்டொளி காட்டிட*
*துன்பம் நீங்கி துலக்கம் கண்டிட*
*தொல்லைகள் தொலைந்து சுகங்கள் சேர்ந்திட*
*காடுகள் விளைந்து கடும்பசி போக்கிட*
*நாடுகள் தோறும் நல்லுறவு ஓங்கிட*
*புதிய புத்தாண்டே புலர்ந்துநீ வருக.*

*போர்கள் ஓய்ந்து பொறாமைகள் ஒழிந்திட*
*புதிய பூமி புதிதாய்ப் படைத்தே!*
*புதுமைகள் செய்து புண்ணியம் தேடியே*
*நண்பர்கள் நாடியே நல்லுறவு கொண்டுமே!*
*நானிலம் மகிழ்ந்து நலமாய் வாழ்ந்திட*
*புதிய புத்தாண்டே புலர்ந்துநீ வருக.*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கு மாகாண ரீதியில் நடைபெற்ற ஆணழகன் மற்றும் பெண்ணழகி போட்டிகள்!

பு. கஜிந்தன்




யாழ்.மாவட்ட உடற்கட்டமைப்பு மற்றும் விருத்தி சங்கம் நடாத்திய 6 ஆவது வடக்கு மாகாண உடற்கட்டமைப்பு ஆணழகன் (Body building) மற்றும் பெண் உடலமைப்பு அழகி (Women physique) ஆகிய போட்டிகள் யாழ்ப்பாணத்தில் கடந்த 28ம் திகதி சனிக்கிழமையன்று இடம்பெற்றன.

வட மாகாண உடற்கட்டமைப்பு ஆணழகனுக்காக இடம் பெற்ற போட்டியில், வவுனியா DFC உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாக போட்டியிட்ட சத்தியசீலன் பிரதீப் முதலாம் இடத்தைப் பெற்று வட மாகாண உடற்கட்டமைப்பு ஆணழகனாக தெரிவு செய்யப்பட்டார்.



இந்தப் போட்டியில், இரண்டாம் இடத்தை மன்னார் TSP உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாக போட்டியிட்ட லியோன் ஜோயல் பெற்றுக்கொண்டார்.

மூன்றாம் இடத்தை வவுனியா JRP உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாக போட்டியிட்ட சுகுமார் ரன்சித்குமார் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, பெண்கள் உடலமைப்பு அழகிகளுக்காக நடத்தப்பட்ட போட்டியில், வவுனியா னுகூஊ உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாக போட்டியிட்ட ஜோசப் ஜோன்சன் தவச்செல்வி வட மாகாண பெண் உடலமைப்பு அழகியாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில், இரண்டாம் இடத்தை நியூ கெல்த் பிற்னஸ் சார்பாகப் போட்டியிட்ட மோனிஷா மகேந்திரராஜா பெற்றுக் கொண்டார்.

மூன்றாவது இடத்தை நோத் சென்ரர் உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாக போட்டியிட்ட ஜெயபாணி ஜெகநாதன் பெற்றுக்கொண்டார்.

# கிளிநொச்சி இராணுவ நினைவுச் சின்னம் அகற்றப்பட்டு கலாச்சார மண்டபம் அமைக்கப்பட வேண்டும் — சிறீதரன் எம். பி சுட்டிக்காட்டு!



கிளிநொச்சி இராணுவ நினைவுச் சின்னம் அகற்றப்பட்டு கலாச்சார மண்டபம் அமைக்கப்பட வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் ஒரு இராணுவ நினனைவுச் சின்னம் உள்ளது. டிப்போவிற்கு பின்னால் இரண்டு ஏக்கர் காணி இராணுவத்தின் வசமுள்ளது. தற்போது பேருந்து நிலையம் அமைந்துள்ள பகுதியில் முன்னாள் அமைச்சர் பெரியசாமி சந்திரசேகரனால் மிகப்பெரிய கலாச்சார மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. அதனை இராணுவம் தான் இடித்து அழித்தது.



கிளிநொச்சி டிப்போவிற்கு பின்னால் உள்ள காணியின் இரண்டு ஏக்கர் நிலத்தை மாவட்ட செயலகத்தின் ஊடாக பெற்று, இராணுவ சின்னம் அகற்றப்பட்டு அதில் முன்னாள் அமைச்சர் சந்திரசேகரனின் பெயரில் ஒரு கலாச்சார மண்டபம் அமைக்கப்பட வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் இந்த நகரப் பகுதிக்குள் இவ்வாறு காணிகள் இராணுவத்திற்கு தேவையில்லை என்றார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர், காணி உரிமை கோருபவர்களது மத்தியில் பல்வேறு குளறுபடிகள் இருக்கின்றது. கிராம சேவகர்கள் உண்மையான காணி உரிமையாளர்களை கண்டுபிடிக்க முடியும் என்றார்.



# எமது அரசு கூட்டுறவு துறையை வலுப்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ள இளங்குமரன் எம்.பி

கூட்டுறவு சங்கம் முன்னைய காலத்தில் எவ்வாறு இருந்தது, இப்போது எவ்வாறு இருக்கிறது என சிந்திக்க வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் செயலிழந்த நிலையில் சென்றுகொண்டு இருக்கின்றது. கூட்டுறவு துறையை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எமது அரசாங்கத்துக்கு உள்ளது என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.



கடந்த 1ம் திகதி அன்று சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பிரதம விருந்தினர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விலை நிர்ணயம் எல்லை மீறி, தனியார் கைகளில் செல்கின்றது. இதுவரை இருந்த அரசியல்வாதிகள் அதனை தனியார் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் அதனை வியாபார மா∴பியா என்றுதான் கூற வேண்டும். அதனால் தான் இந்த கூட்டுறவு சங்கங்கள் செயலிழந்துள்ளன. கூட்டுறவு சங்கங்கள் பலமாக இருந்தால், விலை நிர்ணயம் என்பது கூட்டுறவு சங்கத்தால் தான் தீர்மானிக்கப்படும் என்று திடமான நம்பிக்கை எமது அரசாங்கத்துக்கு உண்டு.

விலைகள் அதிகரிக்கும் போதும், பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படும்போதும் கூட்டுறவு சங்கங்கள் பலமாக இருந்தால் அனைத்து சேவைகளும் சிறப்பாக அமையும். சங்கானையில் உள்ள 35 கிளைகளில் இன்று 8 தான் இயங்குகின்றன. ஏனெனில் மக்கள் அருகில் உள்ள கடைகளில் பொருட்களை கொள்வனவு செய்கின்றார்கள். வியாபாரம் என்பது அரசியல் மா∴பியாவிடம் சிக்கி, வியாபாரம் அரசியல் பின்னூட்டலில் நடைபெறுகிறது.

அரசியல்வாதிகள் மாறியுள்ளார்கள் ஆனால் அந்த சிஸ்டம் (முறைமை) மாறவில்லை. இதுதான் நியதி. ஆனால் அரசியல்வாதிகளுக்கும் மா∴பியாக்களுக்கும் இடையே உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இனிமேல் எங்களது பெயரை பாவித்தோ செல்வாக்கை பயன்படுத்த முடியாது. ஏனெனில் நாங்கள் கட்டமைப்புக்கு ஊடாக இயங்க ஆசைப்படுகிறோம் என்றார்.



# இவ்வார ராசிபலன்

## 03-01-2025 வெள்ளி தொடக்கம் 09-01-2025 வியாழன் வரையும்




**மேஷம்:** எதிர்ப்புகள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். வெளி தொடர்பு ஆதாயம் தரும். சேமிப்பு வளரும். வியாபாரம் சிறந்து விளங்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். செய்தொழில் சிறப்படையும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். தொட்டது துலங்கி சட்டென உயரக்கூடிய சாதகமான காலம். பேச்சில் பணிவு தேவை. தனவரவுகள் தடைப்படும் கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. விளையாட்டில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பழையகடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். சொத்துப் பிரச்சனைத் தீர்வுக்கு வரும். பெண்களுக்கு பெருமை சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 8,1,2,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,E




**ரிஷபம்:** களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். திடீர் செலவு ஏற்படும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். குடும்ப மேன்மைகள் உண்டாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு ஏற்படும். உறவினர்களால் தொல்லையுண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் ஏற்படும். காதலால் மகிழ்ச்சி உண்டு. நோய் நொடிகள் அகலும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை. நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். கலை ஈடுபாடுகள் அதிகரிக்கும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். பிணிகள் நீங்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். பயணம் அனுகூலம் தரும். விவேகம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெய்வ பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பணவரவு அதிகரிக்கும். உடல்நலம் சிறக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**மிதுனம்:** பெத்தவங்களோட ஆசி கிட்டும். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலம் கவனம் தேவை. அனுகூலமான போக்கு நிலவி வரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். மனைவியால் மதிப்பு உயரும். பழைய பகை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அத்தியாவசிய செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் ெ சலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு குறையும். நட்பு வட்டம் விரிவடையும். விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். மனதில் மகிழ்ச்சி கூடும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகள் பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ரபகவான், அதிர்ஷ்ட எண்: 9,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,I




**கடகம்:** ஆனந்தம் பெருகும். வாகன மாற்றம் உண்டு. வியாபாரம் விருத்தியாகும். பக்கத்து வீட்டு பகை மாறும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தந்திரமாக செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையகடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். உணவுத்தொழில் உயர்வு பெறும். இனிப்பான செய்திகள் வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். மாற்றங்கள் கிடைக்கும். குடும்ப பாசம் கூடும். பழையகடன் தீரும். மனோபயம் அகலும். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கல்வியில் அக்கறை தேவை. போட்டிகள் அதிகமாகும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Z




**சிம்மம்:** ஏற்றங்கள் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். பூர்வீக சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். இனிப்பான செய்திகள் வரும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்புக்கள் உருவாகும். மனைவி உடல்நலம்




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. இனிய தகவல் வந்து சேரும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டு பயணம் ஏற்படும். மாற்று இனத்தவர் நட்பு கிட்டும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். அனுகூலமற்ற திடீர் தனவரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணங்கள் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். விவசாயம் கைகொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத்தொழில் அமையும். தொழில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 1,3,5,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**கன்னி:** சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பழையகடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். தாய்வழி உறவில் சற்று கவனம் தேவை. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கௌரவம் உயரும். வறுமைகள் ஒழியும். தன லாபம் கூடும். தகுதிகள் உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். தங்க நகைகள் சேரும். சகோதரியால் அனுகூலம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளிப்பதால் யோக பலன் கூடும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய உத்தியோகம் அமையும். பழையகடன் தீரும். அணிகலன்கள் சேரும். புதுத்தொழில் அமையும். வாய்ப்புக்கள் தேடி வரும். வாகன மாற்றம் வரும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. வில்லங்கம் தீரும். வீண் செலவு கூடும். பண நெருக்கடிகள் தீரும். பணி ஆர்வம் கூடும். பாதகமான சூழ்நிலை அமையும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலனில் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். தடைகள் விலகி தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 9,7,6,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**துலாம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். தாராளமான தனவரவுகள் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பால்ய நண்பரை சந்திக்க நேரிடும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். முன்கோபம் தவிர்க்கவும். எதிரிகளையும் நண்பர்களாக்கி ஏற்றங்கள் காணக்கூடிய எதார்த்தமான காலம். லஷ்மி கடாட்ஷம் உண்டாகும். ஆடை, அணிகலன் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: எமதர்மராஜா, அதிர்ஷ்ட எண்: 1,7,5,2
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,W




**விருச்சிகம்:** குதூகலமான மனநிலை காணப்படும். பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு மறையும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கடன் தொல்லை தீரும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. மங்களச் செய்திகள் வரும். திருப்புமுனைகளை சந்திக்கக்கூடிய காலம். திருமண வாய்ப்பு கூடி வரும். கலைத்தொழிலில் உயர்வு பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதுமுயற்சிகள் பலன் தரும். மன சந்தோஷம் கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை ஆபரணம் சேரும். கடனால் பிரச்சனை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு உயர்வு தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். புதிய அனுபவம் பெறுவீர்கள். இன்பமான செய்தி தேடி வரும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். நிதி நிலைமை சீராகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J





**தனுசு:** எடுத்த காரியம் வெற்றி பெறும். தொலைநோக்கு சிந்தனையால் விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கக் கூடிய அற்புதமான காலம். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். இனிய சம்பவம் அமையும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். குதூகலம் அதிகரிக்கும். சகோதரியால் லாபம் உண்டு. மனைவியால் மகிழ்ச்சி உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் தாமதமாகும். வாகன யோகம் உண்டு. வகையான செல்வம் சேரும் காலம். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். புதிய முயற்சி வெற்றித் தரும். பெரியத் திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும்.

(தொடர்ச்சி 26 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1127

## ஆலடி விநாயகர் ஆலயம் திருகோணமலை

**ஆங்கில புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்.**

விநாயகப்பெருமானின் சிறப்பு, புகழ், அருள், பகைவர்களை வென்று மக்களைத் துன்பத்திலிருந்து மீட்டமை போன்ற பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கியதாக விநாயகர் தொடர்பான புராணக் கதைகள் காணப்படுகின்றன. புராணக் கதைகள் வெறும் கற்பனைகளை அடிப்படையாகக் கொண்டவை என்ற கருத்து தவறானது. புராணம் என்றால் புராதனம், பழமை என்ற கருத்தினை விளக்கும். இவ்வாறான புராண கதைகளும் பல்வேறு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

இந்துசமயத்திலே காணப்படுகின்ற ஒவ்வொரு தெய்வத்திற்கும் அத்தெய்வங்களோடு தொடர்புடைய புராணக் கதைகள் பல காணப்படுகின்றன. இவற்றிலே காணப்படுகின்ற கதைகளின் சாரங்களுக்கோ அல்லது சில காட்சிகளுக்கோ வடிவம் கொடுத்து அவற்றைச் சுவரோவியங்களாக ஆலயங்களிலே தீட்டி பக்தர்கள் புரியும் வகையில் அவற்றைத் தெரியப்படுத்தும் பணியைப் பல ஆலயங்கள் செய்துள்ளன. இவ்வாறான பல சுவரோவியங்கள், திருகோணமலை ஆலடி விநாயகர் ஆலயத்திலும் காணப்படுகின்றன.

நல்லவர்கள் எங்கிருக்கின்றார்கள் எனத் தேடிக் கண்டுபிடித்துத் தீங்குசெய்த கஜமுகாசுரனைத் தண்டித்து, பின் மன்னித்து நன்மைசெய்யும் பேரருள் வாய்ந்தவர் விநாயகர் என கந்தர் அனுபூதியில் அருணகிரிநாத சுவாமிகள் அருளியுள்ளார். இக்கதையினை அடிப்படையாகக் கொண்ட கஜமுகன் போரினை விளக்கும் சுவரோவியமும் ஆலடிவிநாயகர் ஆலயத்திலே காணப்படுகின்றது. அத்தோடு விநாயகப்பெருமானோடு தொடர்புடைய விநாயகசஷ்டி விரதம், அனந்தன் சாபநீக்கம் பற்றிய சுவரோவியங்களும் குறிப்பிடத்தக்க அழகிய சுவரோவியங்களாக விளங்குகின்றன.

இவ்வாலயத்திலே காணப்படும் திருவாசி மிக அழகுடையதாகவும் பெரியதாகவும் காணப்படுகின்றது. இத்திருவாசி பன்னிரண்டடி உயரமும், பத்தடி அகலமும் கொண்டது. இத்திருவாசி மகாமண்டபவாசலை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றது. வடகிழக்குத் திசையில் பைரவரும், நாகதம்பிரானும், பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்கள். அத்தோடு அழகியகோபுரத்தைக் கொண்டதாகவும் இக்கோவில் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்திலேயே முதன்முதல் இவ்வாலயத்திலேதான் பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இத்திருவுருவம் 1980 ஆம் ஆண்டு ஆவணிமாதம் 21 ஆம் நாள் பிரதிஷ்டை செய்யப்பட்டு சிறப்பாகக் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இத்திருவுருவம் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. இத்திருவுருவத்தின் பஞ்சமுகங்களும் பல்வேறு தத்துவங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. ஈசானத்திருமுகத்தை மத்தியில் மேல்நோக்கிய பாவனையில் வைத்து தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய நான்கு திருமுகங்களையும் நான்கு திக்கையும் நோக்கியிருக்கும்விதத்தில் இந்தப் பஞ்சமுக விநாயகர் அமைக்கப்பட்டுள்ளார். இத்திருவுருவத்திற்கு விநாயக விரதகாலத்திலே இருபத்தியொருநாளும் பஞ்சமுகார்சனை நடைபெறும்.

இவ்வாலயத்திலே திருவனந்தல், காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை ஆகிய நான்குகாலப்பூசைகளும் சிறப்பாக நடைபெறும். இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவமும் சிறப்பாக நடைபெறும். சித்திரா பூரணையைத் தீர்த்த தினமாகக் கொண்டு பத்துநாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். அத்தோடு மாதசதுர்த்தி, விநாயகவிரதம், கஜமுகசூரசம்மாரம், சர்வாலயதீபம், திருவெம்பாவை, சுவர்க்கவாசல் ஏகாதசி, தைப்பூசம், முதலியவற்றோடு நித்திய, நைமித்திய வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும். மார்கழிமாதம் முழுவதும் திருப்பள்ளியெழுச்சிப் பூசையும், சங்காபிஷேகமும் இங்கு மிகச் சிறப்பாக நடைபெறும். சித்திராபூரணை தினத்தன்று திருகோணமலை ஆலடி விநாயகப் பெருமான் கடற்தீர்த்தம் ஆடச் செல்வார். இத்திருநாளில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கடற்தீர்த்தமாடி விரதம் அனுட்டிப்பது வழக்கம்.

கணபதிபூசை கைமேற் பலன் என்று கூறுவாகள். விநாயகர் வழிபாட்டை யாவரும் எளிதாகக் கடைப்பிடிக்கமுடியும். இருகைகளாலும் தலையிலே குட்டிக் கும்பிடுதலும், இருகைகளாலும் மாற்றி இருகாதுகளையும் பிடித்தக்கொண்டு தோப்புக்கரணம் இட்டு வணங்குதலும் விநாயகர் முன் செய்யப்படும் சிறப்பு வழிபாடுகளாகத் தொன்றுதொட்டுக் கடைப்பிடிக்கப்படுகின்றன. திருகோணமலைப்பிரதேசத்திலே பல விநாயகர் ஆலயங்கள் காணப்பட்டபோதிலும் எண்ணியபொருளெலாம் எழிதில் பெறவைக்கும் விநாயகராக எழுந்தருளியிருந்து, அடியார்களுக்கு வேண்டியதை ஈந்து அருள்பாலிக்கும் தெய்வமாக திருகோணமலை ஆலடி விநாயகர் விளங்குகின்றார்.

*" அஞ்சுஎ ஆனை அடவியுள் வாழ்வன*
*அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குச மாவன*
*அஞ்சையும் கூடத் தடுக்கவல் லார்கட்கே*
*அஞ்சதி யாதி அகம்புக லாமே "*




# இலங்கையில் கண்டி கொழும்பு ஆகிய நகரங்களில் கனேடிய தரத்திற்கு நிகராக முதியோருக்கான நீண்ட கால பராமரிப்பு வசதி

**Canadian Standard Long Term Care Facility in Kandy & Colombo - Sri Lanka**

Are you living Abroad?
No one to take care of your aging parents / Family member in Sri Lanka? We are here for you...
With Canadian Senior Care Standards
Love for your loved ones....

1. Skilled Nursing care 24/7
2. Medical Services
3. Dementia/Alzheimer care
4. Luxury rooms
5. Nutritious meals
6. Physiotherapy
7. Social Activities
8. Religious Activities
9. Ayurveda Treatments

Our Newest Senior living Retreat in Sri Lanka offers quality long term care for your loved ones.
Our focus is providing exceptional services by Canadian trained and registered care professional, who truly care in an environment that promotes healing and wellness.

LET OUR FAMILY TAKE CARE OF YOURS
FACILITY STARTING MID 2025

CALL US FOR MORE INFORMATION
WHATS APP SRI LANKA: +94777872968
WHATS APP CANADA: +15875835686
EMAIL: mistymountaincare@gmail.com
Chamarimw@gmail.com

நீங்கள் வெளிநாட்டில் வசிக்கிறீர்களா?
இலங்கையில் உங்கள் வயதான பெற்றோர் / குடும்ப உறுப்பினரை கவனித்துக்கொள்ள யாரும் இல்லையா?
நாங்கள் உங்களுக்காக இலங்கையில் இருக்கிறோம் ...
கனடிய முதியோர் பராமரிப்பு தரத்திற்கு நிகராக அனைத்து வசதிகளுடன் நாம் சேவை செய்கின்றோம்
உங்கள் அன்புக்குரியவர்கள் நாமும் அன்பு காட்டுவோம்

1. அனுபவம் நிறைந்த மருத்துவ உதவியாளர்களின் 24/7
2. மருத்துவ சேவைகள்
3. மென்டியா/அல்சைமர் ஆகிய நோய்களுக்கான பராமரிப்பு
4. Luxury நிறைந்த வசதியான அறைகள்
5. ஊட்டச்சத்து உணவு
6. பிசியோதெரபி- உடற் பயிற்சி வசதிகள்
7. சமூக மற்றும் பொழுதுபோக்கும் வசதிகள்
8. உங்கள் மதம் சார்ந்த வழிபாடுகள் மற்றும் பிரார்த்தனைகள் அனைத்தும் அடங்கும்
9. அத்துடன் Ayurveda சிகிச்சைகள்

இலங்கையில் எங்கள் புதிய மூத்தவர்களின் புதிய வாழ்க்கை பின்வாங்கல் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு தரமான நீண்ட கால பராமரிப்பை வழங்குகிறது.
எங்கள் கவனம் கனேடிய பயிற்சி பெற்ற மற்றும் பதிவுசெய்யப்பட்ட பராமரிப்பு நிபுணரின் விதிவிலக்கான சேவைகளை வழங்குவதாகும்,
அவர்கள் குணப்படுத்துதல் மற்றும் ஆரோக்கியத்தை ஊக்குவிக்கும் சூழலில் உண்மையிலேயே அக்கறை காட்டுகிறார்கள்.

எங்கள் குடும்பம் உங்கள் அன்புக்குரியவர்களை கவனித்துக் கொள்ளும் இந்த சேவை 2025 நடுப்பகுதியில் தொடங்குகிறது.

மேலும் தகவலுக்கு எங்களை அழைக்கவும்:
வாட்ஸ் ஆப் இலங்கை +94777872968
வாட்ஸ் ஆப் கனடா +15875835686
மின்னஞ்சல்: mistymountaincare@gmail.com
Chamarimw@gmail.com

Amma Pawn Broker
அம்மா நகை அடைவு மாடம்
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்ற முழுக்காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை
CASH FOR GOLD
நத்தார் புதுவருட
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
5 நிமிடங்களில் உங்கள் கைகளில் குறைந்த வட்டியுடன் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்
உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்
எவ்வளவு தொகையானாலும் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
நத்தார் புத்தாண்டு பொங்கலை முன்னிட்டு மிகக் குறைந்த வட்டி வீதத்தில்
ரொரன்ரோவில் வர்த்தகத்துறையில் 30வது வருட கால முன்னோடிகள்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
We buy your old gold jewellery for the highest rate
அம்மா போல அம்மா பவுன் புறோக்கர்ஸ் நம்பிக்கை | நாணயம் | உத்தரவாதம்
105A - 2425 Eglinton Ave, E, Scarborough
(Kennedy & Eglinton) ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

## இவ்வார ராசிபலன்

*(24k பக்கத் தொடர்ச்சி)*

**தனுசு:** சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றித்தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மைத்தரும். தனவரவு உற்சாகம் தரும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. கூட்டுத்தொழில் நன்மை தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஈந்தப்பெருமானை சொந்தம், அதிர்ஷ்ட எண்: 2,4,3,6
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,M




**மகரம்:** மாலை நேரத்தில் பெண்களுக்கு கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். சந்தோஷமான நிகழ்வுகளும் சாதகமான சூழ்நிலை உள்ள அற்புதமான காலம். இக்கட்டான சூழ்நிலை அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். வெற்றி பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை தரும். நல்ல செய்திகள் வரும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உற்சாகம் களை கட்டும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கஷ்ட காலம் விலகும். வார்த்தைகளில் கவனம் தேவை. அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேரும். திருப்பங்கள் நிறைந்த காலம். பாதிப்புக்கள் ஒழியும். சோதனைகள் தீரும். ஆற்றல் வெளிப்படும். சுயத்தொழில் லாபம் தரும். தனவரவு சீர்படும். தகுதி மேம்படும். தாயார் உடல்நிலை சரியாகிவிடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சிக்கன நடவடிக்கை தேவை. தொழில் மந்த நிலை காணும். பணியில் செல்வாக்கு சேரும். தடைப்பட்ட நிலை மாறும். உத்தியோக மாற்றம் ஏற்படும். நலிந்த தொழில் மேன்மை தரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயத்தில் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பணவிரயம் உண்டு. புதிய சிந்தனை உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்ச பூதம், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,R




**கும்பம்:** சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். நீண்ட நாட்களாக நினைத்து வைத்து இருந்த காரியம் இன்று நிறைவேறும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பிள்ளைகளின் உடல்நலனில் அக்கறை தேவை. பெண்களால் பிரச்சனை ஏற்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். மனசஞ்சலம் ஏற்படும். பணவரவு சுமாராக இருக்கும். வேண்டாத வி'யங்களை தவிர்க்கவும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. சகோதர வழியில் ஒற்றுமை அதிகரிக்கும். விவேகமான செயல்களால் வெற்றி கிட்டும். திருமண தடைகள் விலகும். கணவன், மனைவி உறவு வலுப்படும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிம்மதி உண்டாகும். மன சஞ்சலம் குறையும். கமிஷன் தொழிலில் கவனம் தேவை. கணவன், மனைவி இடைய நல்ல உறவு ஏற்படும். உடல் நோயிலிருந்து விடுதலையாவீர். உடன் பிறந்தவரால் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பணவரவு கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகள் தொல்லை உண்டு. புண்ணிய ஸ்தலம் பயணம் ஏற்படும். உடல் உபாதை நீங்கிவிடும். காரியம் இழுபறியாகும். முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதிதேவி, அதிர்ஷ்ட எண்: 1,8,3,5
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,D




**மீனம்:** சிறப்போடும், பொறுப்போடும் செயல்படுவீர். திருப்பு முனைகளை சந்திக்கும் காலமாக அமையும். அயல்நாட்டுப் பிரயாணம் கூடி வரும். உறவினர் பகை மாறும். வேலைவாய்ப்பு கிட்டும். எதிர்ப்புக்கள் விலகும். உயர்ந்த நிலை அடைவீர். பொருளாதார நிலை சீராக இருக்கும். கோபம் தவிர்த்து ஆன்மீகத்தில் ஆர்வம் செலுத்த வேண்டும். புதிய நிலம், வீடு வாங்க நேரிடும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அமையும். எதிர்ப்புக்கள் குறையும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். ஆரோக்கியத்தில் அக்கறை வேண்டும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். காதலர்கள் தம்பதியாவார்கள். செல்வாக்கு மேம்படும். தர்ம சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். அலைச்சல் அதிகரிக்கும். குடும்ப சந்தோஷம் கூடும். உண்மைகள் வெளிப்படும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலனில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். சொல்லில் கவனம் தேவை. விபரீத போக்கு மாறும். சிக்கனத்தை கையாள வேண்டும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வீடு வாங்கும் யோகம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY
எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation
உடற்பருமன் குறைத்தல் | Weight Loss
முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5


MORTGAGE
FINANCIAL SOLUTIONS
RESIDENTIAL
VACANT LAND
INDUSTRIAL
CONSTRUCTION
COMMERCIAL
OUR SERVICE
RESIDENTIAL, COMMERCIAL
• Purchase
- Builder Purchase
- MLS Purchase
- Private Purchase
• Equity line of Credit
• Refinance
• Renewal
CONTACT US
NESAN
Subramaniam
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332
Scotiabank
FIRST NATIONAL FINANCIAL LP
TD Canada Trust
Manulife
NATIONAL BANK
Desjardins
RFA
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages
55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1500 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 3, 2025

# கனடா – இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் "வர்த்தக தீபம்" விழாவில் கௌரவித்த மூன்று சாதனையாளர்கள்





கனடாவில் கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவரும், இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் தமது இவ்வருடத்து "வர்த்தக தீபம்" பெருவிழாவில் பல்வேறு துறைகள் சார்ந்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்தது

இவ்வருட "வர்த்தக தீபம்" விழாவில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம், மொன்றியால் வர்த்தகப் பிரமுகர் ஏஎம்ஆர் முத்தையா இராஜகோபால் மற்றும் உதவும் பொற்கரங்கள் அமைப்பின் நிர்வாகி விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை ஆகியோர் விழா மேடையில் கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.

# மியன்மாரிலிருந்து தப்பி வந்த அகதிகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மன்னிப்பு கோரிய இலங்கை குடிவரவு அதிகாரி



யுத்த அனாதைகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாமிற்குள் பிரவேசித்து அவர்களுக்கான நலன்புரி விடயங்களை பார்வையிடச் சென்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டமைக்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் வருத்தம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு விமானப்படை தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குழந்தைகள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மியன்மாரில் இருந்து தப்பி வந்த புகலிடக் கோரிக்கையாளர்களின் தடுப்பு

நிலைமை மற்றும் நலன்களை பரிசோதிக்கச் சென்ற ஒரு வைத்தியர் மற்றும் ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி ஆகியோரை விமானப்படை அதிகாரிகள் தடுத்ததாக ஆணைக்குழு அண்மையில் தலைமைத் தளபதியான ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# ஸ்காபுறோவில் நடைபெற்ற "ஒப்ரேசன் லிபரேசனும் தேசியத் தலைவரின் மதிநுட்ப நகர்வும்" என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு





கடந்த 29-12- 2024 அன்று

ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோவில் நடைபெற்ற அ. சேரா எழுதிய "ஒப்ரேசன் லிபரேசனும் தேசியத் தலைவரின் மதிநுட்ப நகர்வும்" என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வில் விஸ்ணு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இங்கே காணப்படும் படங்களில் ஸ்காபுறோ செல்வச் சந்நிதி ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ புவனேஸ்வரக் குருக்கள். கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம். மற்றும் ஈசி 24 நியுஸ் கிருபா பிள்ளை ஆகியோர் நூல் பிரதிகளை வெளியீட்டாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதைக் காணலாம்.

# ஸ்காபுறோவில் நடைபெற்ற "ஜனனியின் விரல் மீட்டும் ஸ்வரங்கள்" இசை நிகழ்ச்சி, கலந்து கொண்டவர்களை பரவசத்தில் ஆழ்த்தியது!




கடந்த 28ம் திகதி சனிக்கிழமையன்று ஸ்காபுறோவில் தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் நடைபெற்ற "ஜனனியின் விரல் மீட்டும் ஸ்வரங்கள்" இசை நிகழ்ச்சி கலந்து கொண்டவர்களை பரவசத்தில் ஆழ்த்தியது என்றால் அது மிகையாகாது.

**Autism Learning Centre** அமைப்பின் ஆதரவில் சத்தியா சுரேஸ் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற "ஜனனியின் விரல் மீட்டும் ஸ்வரங்கள்" இசை நிகழ்ச்சிக்கு "ஆரோசை" இசைக்குழுவினர் பின்னணி இசைவழங்கினர். நிகழ்ச்சிகளை திருமதி அபிசேகா சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

# இலங்கை தேசிய அருங்கலைகள் பணியக தங்க விருதினைப் பெற்ற யாழ் மண்ணின் அருங்கலை வித்தகன் பத்மநாதன் சியாம்கிருஸ்ணா



அண்மையில் இலங்கைத் தீவெங்கிலும் உள்ள அருங்கலை விற்பன்னர்களை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்பெறும் போட்டியில் இலங்கை தேசிய அருங்கலைகள் பணியகத்தின் தங்க விருதினைத் தட்டிக் கொண்ட யாழ்ப்பாண மண்ணின் அருங்கலை வித்தகன் பத்மநாதன் சியாம்கிருஸ்ணா அவர்களை யாழ்ப்பாணம் வாழ் மக்கள் மாத்திரமல்ல, உலகெங்கும் வாழும் மக்கள் பலரும் பாராட்டி மகிழ்கின்றார்கள்.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)